# பாரதி படைத்த வாழ்க்கை நெறி

(துணைப்பாட நூல்)

பத்தாம் வகுப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதற் பதிப்பு—1972

அச்சிட்டது : ஜூப்பிட்டர் என்டர்பிரைசஸ், சென்னை-2.

# உள்ளுறை


1. தோற்றுவாய் 1
2. தாய்நாட்டுப் பற்று 7
3. தமிழ்நாட்டுப் பற்று 16
4. தமிழ்மொழிப் பற்று 23
5. பாரத சமுதாயம் 37
6. சாதிக் கொடுமை 47
7. பெண்ணுரிமை 55
8. கைத்தொழிலும் கலையறிவும் 61
9. திறமான கல்விமுறை 68
10. விடுதலை வேட்கை 75
11. அன்புடைமையும் அச்சமின்மையும் 80
12. வாழும் முறைமை 84
13. காந்தி நெறி 95
14. சமயப் பொதுநோக்கு 103
15. வாழிய பாரத மணித்திருநாடு 113

# பாரதி படைத்த வாழ்க்கை நெறி

## 1. தோற்றுவாய்

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.'

உலகத்தில் எண்ணிறந்தோர் பிறந்து வாழ்ந்து மறைகின்றனர். இவ்வாறு தோன்றி மறையும் எண்ணற்றவர்களுள் மிகச்சிலரே உலக வரலாற்றில் இடம்பெறுகின்றனர். இவர்களிலும் நினைவுமணங் கமழும் வாடாமலர்களாய் வரலாற்றுச் சோலையிலே விளங்குவோர் மிக மிகச்சிலரே யாவர்.

வரலாற்று நூல்களிலே பல வல்லரசுகளை ஆண்டுவந்த மாமன்னர்களைப்பற்றி நாம் படிக்கின்றோம். அதனுடன் அவர்கள் நினைவு நின்றுவிடுகின்றது. இன்றைய நம் வாழ்விற்கு அவர்களின் நினைவால் பெரும்பயனேதும் விளைவதில்லை. கொடும் போர்களை நடத்தி, நாடுகள் பலவற்றை வென்று, உலகின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்த வீர மன்னர்களின் பெயர்கள் வெற்று எழுத்துகளாகவே வரலாற்று ஏடுகளில் இடம் பெற்றுள்ளன. அப் பெயர்களை நாம் படிக்கையில்

நமது உள்ளம் கிளர்வதில்லை; உணர்ச்சி பொங்குவதில்லை.

அறிவியல், இலக்கியம், மெய்யுணர்வு ஆகிய துறைகளிலே சிறந்து விளங்கியோர்களின் நிலையோ வேறு. இவர்கள் வரலாற்றிலே இடம் பெறுவதோடு வரலாற்றினை உருவாக்கும் சிற்பி களாகவும் உள்ளனர். இவர்கள் அளித்துச் சென்ற அறிவியல் நூல்கள், இலக்கியங்கள், மெய்யறிவுக் கருவூலங்கள் இன்றும் நம் வாழ் விற்குப் பயன்தரும் ஒப்பற்ற செல்வங்களாய் விளங்குகின்றன. இவர்கள் கூறிச்சென்ற கருத்துகள் நம் உள்ளத்திற்கு உரமேற்று கின்றன; வாழ்விற்கு வழிகாட்டுகின்றன.

உடலை வருத்தி மக்களை அடக்க முயன்ற வர்கள் போர்த் தலைவர்கள்; உள்ளத்தைத் திருத்தி மக்களை உயர்த்த முயன்றவர்கள் மெய் யறிவுச் சான்றோர்கள். அழியும் உடலை அடக்க முற்பட்டோரின் முயற்சி அழிந்தது; அழியாத உள்ளத்தை உயர்த்த முனைந்தோரின் முயற்சி அழியவில்லை. காலவெள்ளத்திலே பேரரசர்கள் கட்டிய கற்கோட்டைகள் கரைந்துபோயின. பேரறிஞர்கள் கட்டிய கருத்துக் கோவைகளோ கலங்கரை விளக்கங்களாய் ஒளிர்கின்றன.

அசோக மாமன்னனின் வல்லரசு அழிந் தது; அவனுக்கு முன்பு வாழ்ந்த புத்தபிரானின் அருளரசு அழியவில்லை. பேரரசன் அலக்சாந்தர்

கட்டிய அரண்மனைகள் மறைந்தன ; பேரறிஞர் அரிஸ்டாட்டில் கூறிய அறிவுரைகள் மறைய வில்லை.

இவ்வாறு காலம் என்னும் ஏட்டிலே தமக் கென வாழ்ந்தோரின் தடம் மறைந்துவிடுகிறது. பிறர்க்கென வாழ்ந்தோரின் பெற்றிமையோ பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படுகின்றது.

'உண்டா லம்மஇவ் வுலகம்... ... ... ...
... ... ... ... ... ... ... ... ...
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே'

என்பது புறநானூற்றுப் பாடல். தமக்கென முய லாது பிறர்க்கென முயலும் சான்றோர் உளராத லால்தான் இவ் வுலகம் இயங்குகிறது என்பது உயரியதோர் உண்மையாகும்.

இத்தகைய சான்றோர்களின் வழிவந்த ஞானக் கவி ஒருவர் அண்மையிலே நம்மிடையே வாழ்ந்து மறைந்தார்.

'... ... ... ... ... ... என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்'

என்னும் அடங்காத ஆர்வத்துடன் அவர் பாடினார். அன்று நம் நாடு அயலார் ஆட்சி யில் அடங்கியிருந்தது. அடிமைகளாய் வாழ் கின்றோமே என்னும் எண்ணங்கூட மக்களுக்கு அன்று ஏற்படவில்லை. அஞ்சியஞ்சி உயிர்

வாழ்ந்த தம் நாட்டு மக்களின் அவல நிலை கண்டு அவர் உள்ளம் புழுங்கினர். புழுங்கிய உள்ளத்திலிருந்து புது வெள்ளம்போல் பெருக்கெடுத்தது அவர் கவிதை.

அயர்ந்து கிடந்த மக்கள் அவர் பாடல்களைக் கேட்டு ஆவேசங்கொண்டனர்; ஆர்த்தெழுந்தனர்; அஞ்சி நின்ற மக்கள் அச்சத்தை ஒழித்தனர். விடுதலை வேட்கைத் தீயை நாடெங்கும் மூட்டின அவர்தம் பாடல்கள்.

தாய்நாடு, தாய்மொழி ஆகிய இரண்டுமே அவர் பாடல்களின் உயிர்நாடிகள். நாட்டுப் பற்றினை நவிலும் அவர் பாடல்கள் காட்டு வெள்ளம்போல் கரை புரண்டு ஓடுவன. செந்தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறும் பைந்தமிழ்ப் பாடல்கள் தேனைக இனிப்பவை; தெவிட்டாது சுவைப்பவை.

தாம் வாழ்ந்த சமுதாயத்தில் நிலவிய குறைகளைக் கண்டு கவிஞரின் மனம் குமுறியது. கொடுமைகளைக் கண்டு அவர் மனம் கொதித்தது. ஏழைகளை நினைந்து அது இரங்கியது. வறுமையை நினைந்து அது வாடியது. சாதிப் பிரிவுகளை அவர் சாடினர். சமய ஒற்றுமையை அவர் நாடினர்; ஒன்றே குலம் என்று கூறினர்; ஒற்றுமையின் தேவையை ஓதினர்; அழகைப் போற்றினர்; ஆற்றலை ஏற்றினர்; உழைப்பினைப் புகழ்ந்தார்; ஓய்வினை இகழ்ந்தார்; மூடக்

கொள்கைகளை மறுத்தார்; மூடு மந்திரங்களை வெறுத்தார்; சமயத்தின் சாரத்தைக் காட்டினார்; சமரச ஞானத்தை நாட்டினார்; இயற்கையைப் பாடினார்; இறைமையைப் பாடினார்; மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் எத்தனையோ பாடல்களை அவர் இயற்றினார்.

தமது கவிதையின் மேன்மைபற்றி அவரே கூறுகின்றார்:

'சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை ... ... ...'

உண்மைதான். அவர் கவிதைகள் எந்நாளும் அழியாதவை என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இறவாக் கவிதைகளை இயல்பாய்ப் பாடியவர், அண்மையில் வாழ்ந்து மறைந்த கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவர். அவரைப் பாரதியார் என்று நாம் அழைக்கின்றோம். கி. பி. 1882ஆம் ஆண்டில் பிறந்த அவர் வாழ்ந்தது முப்பத்தொன்பது ஆண்டுகள்தாம். இருப்பினும், இக் குறுகிய காலத்திலேயே, கவியுலகில் புதிய ஒளியை ஏற்றிய தனிப் பெருமை அவருக்குண்டு. அவர் கவிதைகளைப் பல நாடுகளிலும் மொழி பெயர்த்துப் படித்துப் பயன்பெறுகின்றனர். அந்த விடுதலைக் கவிஞரின் வீரமும் வேகமும் மிக்க கவிதைகளைச் சோவியத் மக்கள் மிகவும் விரும்பிப் படிக்கின்றனர்.

நம் நாட்டிலோ அப் புதுமைக் கவிஞரை நாம் போற்றுகிறோம். ஆயினும் அவர் கவிதைகளை ஊன்றிப் படிப்பதில்லை. அக் கவிதைகளைப் படித்தாலும் அவை காட்டும் வழியில் நாம் நடப்பதில்லை. கவிஞரைப் போற்றிப் பயன் என்ன? அவர் கவிதைகளைப் பாடித்தான் பயன் என்ன? பாரதி படைத்த நெறியினிலே நாம் வாழாமல் பாரதியை மட்டும் புகழ்வதாலோ போற்றுவதாலோ பலனேதும் விளையப் போவதில்லை. பாரதி படைத்த வாழ்க்கை நெறியினைக் கண்டு உணர்ந்து, அதன்வழி நாம் வாழ்ந்தால்தான், நாமும் உயர்வோம்; நாடும் உயரும்.

# 2. தாய்நாட்டுப் பற்று

பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!

என்று நம் நாட்டின் பெருமையை நமக்கு நினைவூட்டுகிறார் பாரதியார்.

தாய்நாட்டுப் பற்று என்பது ஏதோ ஒரு மூடக்கொள்கை அன்று; குருட்டுத்தனமான வெறி அன்று. அஃது ஒரு பண்பாடு. நம்முடைய பிற பண்பாடுகள் எல்லாவற்றுக்கும் அடிப்படையானது.

நமது தாய்நாடான பாரதம் பரந்த இவ்வுலகத்தின் ஒரு பகுதிதான் என்பதில் ஐயமில்லை. இவ்வுலகம் முழுவதுமே ஒரு வகையில் நமக்குரியதுதான். ஆயினும், நாம் எந்தச் சூழலில் பிறந்து வளர்ந்து நம் இளம்பருவத்தினைக் கழித்தோமோ, அந்தச் சூழலுக்கேற்றவாறே நமது இயல்புகள் அமைகின்றன. நாம் பிறந்து வளர்ந்து வாழும் நாட்டின் இயற்கையமைப்புக்கு ஏற்பவே நமது வாழ்க்கை முறையும் உருப்பெறுகின்றது.

உயர்ந்த மலைகளும் நீண்ட ஆறுகளும் உள்ள நாட்டு மக்களின் வாழ்க்கை முறையும்,

பாலைவன நாட்டிலே உள்ள மக்களது வாழ்க்கை முறையும் ஒன்ருக இருப்பதில்லை. ஆறு மாத காலம் பகலும் ஆறுமாத காலம் இரவுமாய் உள்ள 'ஆர்க்டிக்' நிலப்பரப்பில் பனியிலேயே வீடுகள் கட்டி வாழும் எஸ்கிமோக்களின் வாழ்க்கைமுறை வேறுதான். 'ஆற்றிலும் சுனை யூற்றிலும், தென்றல் காற்றிலும் மலைப்பேற்றிலும்' வளம்பெற்ற நாட்டிலே வாழும் மக்களின் வாழ்க்கைமுறை வேறுதான். காய்களும் கனிகளும் பலவிதத் தானியங்களும் மலிந்து கிடைக்கும் நாட்டிலுள்ளோர் ஊன் உண்பதைத் தவிர்க்கலாம். ஆனல், புல்லே முளைக்காத பனி நாட்டில் வாழ்வோர் அங்குள்ள விலங்கினங்களை வேட்டையாடியே உண்ணவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆற்றிலோ குளத்திலோ நாம் நீராடிக் களிப்பதுபோல் பனி நாட்டு மக்களோ பாலைவன நாட்டு மக்களோ நீராட முடிவதில்லை. இவ்வாறு, நாடுகளின் மாறுபட்ட இயற்கை அமைப்புகளுக்கேற்ப மக்களின் வாழ்க்கைமுறைகளும் வேறுபட்டு அமைகின்றன. வாழ்க்கைமுறையின் அடிப்படையில் எழுவது பண்பாடு. எனவே, பண்பாடுகளும் நாட்டுக்கு நாடு வேறுபட்டுள்ளன.

இயற்கையோடு ஒன்றி இயைந்து வாழும் மக்களின் வாழ்க்கைமுறை என்னும் மரத்திலே பழுக்கும் கனிகளையே நாம் 'பண்பாடு' என்று குறிக்கின்ருேம். வாழ்க்கைமுறைக்கேற்ப

மக்களின் உள்ளம் உயர்கின்றது. அவர்கள் கற்பனை வளர்கின்றது. அவர்கள் மொழியும் வளம் பெறுகின்றது. அத்தகைய உள்ளத்து உயர்வால் அவர்களிடம் உயர்ந்த கருத்துகள் தோன்றுகின்றன; கற்பனைத் திறனால் கலைகள் பல பிறக்கின்றன; இனிய மொழிவளத்தால் இலக்கியங்கள் எழுகின்றன. வாழ்வின் பல துறைகளைப்பற்றிய கருத்துகளும் இசை, கூத்து, சிற்பம், சித்திரம்போன்ற கலைகளும் எழுத்தோவியங்களான இலக்கியங்களுமே பண்பாட்டின் சின்னங்கள்.

இந்தப் பண்பாடு ஒரு தலைமுறையிலோ, இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளிலோ தோன்றி வளர்வது அன்று. நெடுங்காலமாக, வழிவழியாக வளர்ந்து வளம்பெறுவதே பண்பாடாகும். இஃது ஒரு நாட்டின் இயற்கை வளங்களோடு இசைந்து இலங்குகிறது.

ஆதலால், நாட்டுப்பற்று என்பது அந் நாட்டு மண்மீதும், மரங்கள்மீதும், ஆறுகள்மீதும், அடவிகள்மீதும் கொள்ளும் பற்றுமட்டும் அன்று. இவ் வியற்கைச் சூழலிலே எழுந்து வளர்ந்து வளம்பெற்ற பண்பாட்டின்மீது நாம் கொள்ளும் பற்றே நாட்டுப் பற்றாகும். இதனை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு நம் பாரத நாடு அடிமைப்

பட்டிருந்தது. அடிமைகளாய் வாழ்கின்றோமே என்ற எண்ணங்கூடப் பெரும்பாலான மக்களிடம் அன்று இல்லை. அச்சவுணர்வே அடிமை மக்களிடம் மிகுதியாய்க் காணப்பட்டது. 'சிப்பாயைக் கண்டும்,' 'ஊர்ச்சேவகன் வருதல் கண்டும்,' 'துப்பாக்கிகொண்டு ஒருவன் தூரத்தில் வரக்கண்டும்' அவர்கள் அஞ்சினர்; தம்மை ஆண்டுவந்த வெள்ளை நிற ஆங்கிலேயரைத் தெய்வங்களாகவே மதித்து அஞ்சினர். இவ்வாறு அஞ்சியஞ்சி வாழ்ந்த மக்களின் அவலநிலை கண்டு 'நெஞ்சு பொறுக்க'வில்லை பாரதிக்கு. எனவே, பாரத நாட்டின் பெருமையை அவர் மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

நம் நாட்டு வரலாறு பழமையானது; நாகரிகம் தொன்மை வாய்ந்தது. ஐரோப்பிய நாட்டினர் பலரும் நாகரிகம் இன்றி வாழ்ந்த காலத்தில் நமது பாரத நாடு வாழ்வின் பல துறைகளிலும் முன்னேறியிருந்தது. கொல்லாமை என்னும் நன்னெறி காட்டிய புத்தர் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தோன்றினர். தமிழ்நாட்டிலுள்ள காஞ்சி மாநகரிலே வெளிநாட்டு மாணவர்களும் வந்து உயர்கல்வி கற்றுத் தேர்ந்த கல்விக் கழகம் ஒன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது. அப்பொழுது உலகில் பெரும் பகுதியில் எழுத்தறிவே பரவவில்லை. இத்துணைப் பழம்பெருமை வாய்ந்தது பாரதநாடு.

இப் பெருமையை எல்லாம் மக்கள் உணர வேண்டும் என்னும் கருத்துடன் பாரத நாட்டின் சிறப்பினைச் சீரிய பாடல்களில் பாரதியார் தீட்டி யுள்ளார் :

'பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.'

'நன்மையி லேஉடல் வன்மையிலே—செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தம் கற்பின்
புகழினி லேஉயர் நாடு.'

'வண்மையி லேஉளத் திண்மையிலே—மனத்
தண்மையி லேமதி நுண்மையிலே
உண்மையி லேதவ றுதபுலவர்
உணர்வினி லேஉயர் நாடு.'

எத்தனை எத்தனையோ நூல்களைக் கோடிக் கணக்கான நூல்களைப் பாரத நாட்டினர் இயற்றிய நாள்கள் உண்டு. உண்மையறிவு பெறுவதற்கென்று பிறநாட்டு அறிஞர்கள் பாரத நாடு தேடிவந்த நாள்களும் உண்டு. இன்றோ கல்வியறிவு தேய்ந்து, அறிவுவளம் குன்றியுள்ளது. இருப்பினும் நிலைத்துநிற்கும் உண்மையை இறைஞ்சி நிற்கிறது நம் நாடு என்று கூறுகிறார் கவிஞர் :

'நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்
தேறும் உண்மை கொள்ள இங்குத்
தேடி வந்த நாளினும்

மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்
ஈறு நிற்கும் உண்மை யொன்று
இறைஞ்சி நிற்பள் வாழ்கவே.

இமய மலையும் கங்கை நதியும் இணையற்ற உபநிடத நூல்களும் பொன்னொளிர் பாரதம் பூணும் அணிகள் ஆகின்றன.

'மன்னும் இமயமலை யெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே.'

நாம் ஏன் தாய்நாட்டின்மீது பற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணத்தையும் கூறுகின்றார் கவிஞர். அவர் கூறும் காரணம் நம் நெஞ்சினை நெகிழ்விக்கிறது; உணர்ச்சியைப் பெருக்குகிறது.

நம் தாயும் தந்தையும் மகிழ்ந்து குலாவி வாழ்ந்தது இந் நாட்டில்தானே! அவர்களுடைய முன்னோர் அனைவரும், எத்தனையோ தலைமுறைகளுக்கு முந்தியவர் எல்லாரும், தொடர்ந்து ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளாய்

வாழ்ந்து மடிந்தது இந் நாட்டிலன்றோ? அவர்களுடைய சிந்தனையில் ஆயிரம்ஆயிரம் எண்ணங்களை வளரச்செய்தது இந் நாடுதானே!

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
"வந்தே மாதரம் வந்தே மாதரம்"
என்று வணங்கேனோ?'

நம்மைப் பெற்ற தாய்மார்களை வயது முதிர்ந்த நிலையில் இன்று பார்க்கின்றோம். அவர்கள் எல்லாரும் சின்னஞ்சிறு குழந்தைகளாய் மழலை மொழி பேசி மகிழ்ந்திருந்தது இந் நாட்டிலே தான். அவர்கள் இளங்கன்னிப் பருவமெய்தி இனிய நிலாவின் ஒளியிலே விளையாடி இன்புற்றதும் இந் நாட்டிலேதான். இங்குள்ள ஆறுகளிலும் குளங்களிலும்தானே நம்மைப் பெற்ற தாய்மார்கள் நீராடிக் களித்தனர்! இத்தகைய நாட்டினை நாம் வணங்கி வாழ்த்தவேண்டாவோ?

'இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே — எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே — அவர்

கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே — தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடிஇல்
போந்ததும் இந்நாடே—இதை

"வந்தே மாதரம் வந்தே மாதரம்"
என்று வணங்கேனே?'

தங்கள் பெருமையை உணராது அடிமை வாழ்விலே அமிழ்ந்து மயங்கிக்கிடக்கும் இந்திய மக்களை எழுப்பவேண்டுமே! மக்களனைவரும் மயங்கிக்கிடந்தால் நாடே தூங்குகிறது என்று தானே கொள்ளவேண்டும்? எனவே, தூங்கும் பாரத நாட்டிற்குப் பள்ளியெழுச்சி பாடினர் கவிஞர். துயில் நீங்கி எழுந்துவரும்படி அவர் பாரதத் தாயை வேண்டுகிறார்.

'பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே!
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தரு ளாயே!'

இவ்வாறாக நாம் வாழும் பாரத நாட்டினைப் பாரதத் தாய் என்று உருவகம் செய்து, 'பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி,' 'பாரத மாதா நவரத்தின மாலை,' 'பாரத தேவியின் திருத்

தசாங்கம்' என்னும் தலைப்புகளிலே உணர்ச்சி மிக்க பாடல்களைக் கவிஞர் பாடியுள்ளார்.

இந்திய நாட்டின் ஏற்றத்தினை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளுதற்கு உறுதுணையாய் இருக்கின்றன கவிஞரின் பாடல்கள். இன்றும் நம் நாட்டின் சிறப்பினை நலமுற உணர்ந்தோர் சிலரேயாவர். எனவே, பாரத நாட்டின் பழம் பெருமையினை உணர்த்தும் இப் பாடல்கள் இன்றும் தேவையாகின்றன.

# 3. தமிழ்நாட்டுப் பற்று

'பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பாரத நாடு.'

என்று பாடிய பாரதியார்,

'தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!'

என்று 'பாப்பாப் பாட்டிலே' கூறுகிறார்.

நமது பாரத நாடு பெரியதொரு நாடு. பல மொழிகளைப் பேசும் மக்கள் நமது நாட்டில் வாழ்கின்றனர். மராட்டியர், குஜராத்தியர், பாஞ்சாலப் பகுதியினர், நாகர், அசாமியர், ஓரியர், வங்காளியர், இந்திப் பகுதியினர், தமிழர், தெலுங்கர், கன்னடியர், கேரளத்தினர் என்று பலதிற மக்கள் பாரதத்தில் உள்ளனர். அந்தந்த மொழிகளில் இலக்கியங்கள் உள்ளன. அந்தந்தப் பகுதிகளின் சூழல்களுக்கேற்பச் சில பண்பாட்டு வகைகளும் காலப்போக்கிலே உருவாகியுள்ளன. இப் பண்பாட்டு வகைகள் அனைத்தும் அடங்கியதே இந்தியப் பண்பாடாகும். மராட்டியப் பண்பாடே இந்தியப் பண்பாடு என்றோ, தமிழ்ப் பண்பாடு மட்டுமே இந்தியப் பண்பாடாகும் என்றோ கூறுவது பொருந்தாது. எல்லா வகைப் பண்பாடுகளும் கூடி இசைந்ததே இந்தியப் பண்பாடு. இவ் வகைப் பண்பாடுகளுக்

கிடையே அடிப்படை ஒற்றுமை உண்டு. இந்த ஒற்றுமையை நாம் நன்கு உணர்ந்தால்தான் இந்தியப் பண்பாட்டின் ஏற்றத்தினை நாம் அறிந்தவர்கள் ஆவோம். எனவே, தமிழ்நாட்டின் சீரும்சிறப்பும்பற்றிப் பாடுவது பாரத நாட்டின் சீரையும் சிறப்பையும்பற்றிப் பாடுவதேயாகும்.

செந்தமிழ் நாட்டின் சீர்மையைக் கூறும் பாரதியாரின் கவிதைகள் ஈடும் இணையுமற்று விளங்குவன. அக் கவிதைகளில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பும், இயற்கை வளங்களும், இலக்கியச் செல்வங்களும் போற்றப்படுகின்றன.

அரபிக்கடலும் வங்கக்கடலும் இந்திய மாகடலும் இணைந்து சேரும் கன்னியாகுமரி எல்லை கவிஞரின் மனக்கண்முன் வருகின்றது; வடக்கே உள்ள வேங்கட மலைக் குன்று தெரிகின்றது. இந்த எல்லைகளுக்கிடையே புகழ் மண்டி விளங்குகிறது தமிழ்நாடு என்று கவிஞர் பாடுகின்றார்.

'நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.'

காவிரியும் தென்பெண்ணையும் பாலாறும் தமிழ் வளர்த்த வையை, பொருநை நதிகளும் பெருகிப் பாய்வதால் செழித்து விளங்குகிறது தமிழ்நாடு.

'காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி — என
மேவிய யாறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு.'

இயற்கை வளம்மட்டுமே ஒரு நாட்டிற்கு உயர்வு தந்துவிடுவதில்லை. அந் நாட்டின் அறிவு வளத்தைப்பொறுத்தே அதன் பெருமை உயருகின்றது. அலக்சாந்தர்போன்ற போர் வீரர்கள் பிறந்ததால்மட்டும் கிரேக்கநாட்டின் பெருமை உயர்ந்துவிடவில்லை. சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில்போன்ற அறிஞர்களைப் படைத்தமையாலேயே அந் நாட்டின் பெருமை நிலைத்துள்ளது.

நம் தமிழ்நாட்டிலே திருக்குறளை இயற்றிய வள்ளுவர் தோன்றினர். திருக்குறள் ஒரு நாட்டினருக்கென்றோ, ஒரு காலத்தினருக்கென்றோ எழுதப்பட்டது அன்று. உலகில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அந் நூல் வழி வகுக்கிறது. எனவேதான் திருக்குறளைப் 'பொது மறை' என்றும், 'பொய்யாமொழி' என்றும் அறிஞர் புகழ்ந்து கூறுகின்றனர். இத்தகைய இணையற்ற குறள்போன்ற நூல் வேறு எந்த மொழியிலும் இதுவரை தோன்றவில்லை. தமது திருக்குறளைத் தமிழ்மக்களுக்கு என்று மட்டும் வள்ளுவர் எழுதவில்லை. உலக மக்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்றே

அவர் அதை எழுதியுள்ளார். எக் காலத்திற்கும் எந் நாட்டு மக்களுக்கும் அது மிகப் பொருந்திப் பயன்படுவதால் திருக்குறளை உலக நாட்டு மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்த்துப் படிக்கின்றனர். இவ்வாறு வள்ளுவரை உலகுக்கு அளித்து வான்புகழ்கொண்டது தமிழ்நாடு என்று பாடுகின்றார் கவிஞர். உள்ளத்தை ஈர்க்கும் 'சிலப்பதிகாரம்' என்னும் காவியம் தமிழ் நாட்டினை அழகு செய்யும் அணிபோன்று உள்ளது என்று அவர் கூறுகின்றார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு — நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் — மணி
யாரம் படைத்த தமிழ்நாடு.'

ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கடல்கடந்து பல நாடுகளில் குடியேறித் தங்கள் நாகரிகத்தைப் பரப்பிய பெருமை தமிழர்களுக்கு உண்டு. இன்று இலங்கை, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா என்று கூறப்படும் நாடுகளுக்கெல்லாம் அன்று நம் முன்னோர்கள் சென்று தங்கள் புலிக் கொடியையும் மீன் கொடியையும் பொறித்துவந்தனர். பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே சீனு, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளுடன் வாணிகம் செய்து, வாணிகப் பொருள்களோடு கலைகளையும் பரிமாறிக் கொண்ட பெருமையும் தமிழ்நாட்டிற்கு உண்டு.

'சிங்களம் புட்பகம் சாவகம்—ஆதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.'

'சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிகமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு.'

இவ்வளவு ஏற்றமும் இசையும் பெற்ற நாடு நமது தமிழ்நாடு. நமது நாட்டின் வரலாற்றினைப் படித்தால் இதன் உண்மை நன்கு விளங்கும். இந்தப் பெருமைகளையெல்லாம் மனத்திலே கொண்டிருப்பதால், 'செந்தமிழ் நாடு' என்னும் சொல்லைக் கேட்டதுமே, இன்பமாகிய தேன் வந்து பாய்கின்றது நம் காதுகளில். வீரம் மிகுந்த நம் தந்தையர் நாடு இது என்று பேசும் பொழுது ஒரு புதிய ஆற்றல் பிறக்கின்றது நம் உள்ளத்தில்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.'

தமது பழம்பெருமையைத் தமக்குள்ளே பேசிக் கொண்டு, அதிலேயே மனநிறைவு கொள்ளும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர் பாரதியார்.

'மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை'

என்று அவர் இடித்துக்கூறுபவர். இருப்பினும், தமிழ்நாட்டின் பழம்பெருமையை நமக்கு அவர் எடுத்துக் கூறுகின்றார் என்றால், அதற்குக் காரணம் நாம் நமது பழைய பண்பாட்டினை மறந்து நிற்பதுதான். நமது பழம்பெருமையைக் கேட்டால்மட்டுமே நமது இன்றைய நிலை நமக்கு நன்கு விளங்கும். இவ்வளவு பெருமை வாய்ந்த தமிழ்நாட்டிலே பிறந்த நாமா இந்நிலையில் உள்ளோம் என்னும் ஆவேச உணர்ச்சி எழும். இந்த உணர்ச்சி நம்முள் பலருக்கு இன்னும் வரவில்லை. இந்த உணர்ச்சி இல்லையேல் நாம் உயரமுடியாது, 'செந்தமிழ் நாடு' என்று கேட்கும்போதெல்லாம் நம் உள்ளத்திலே இன்ப உணர்வு எழுந்து பொங்க வேண்டும். அப்பொழுதுதான் நம் ஆற்றல் வளரும்; ஆக்கம் பெருகும்.

## 4. தமிழ்மொழிப் பற்று

நாட்டுப் பற்று என்பது நம் பண்பாட்டின் மீது நாம் கொள்ளும் பற்றேயாகும் என்று கண்டோம்.

ஒரு நாட்டின் பண்பாட்டிற்கு அடிப்படையாய் அமைவது அந் நாட்டின் மொழியே. ஓவியம், சிற்பம், நடனம், இசை போன்ற அருங்கலைகளே பண்பாட்டின் சின்னங்களாகின்றன. ஆயினும், இக் கலைகளையெல்லாம் விடச் சிறந்து விளங்குவது இலக்கியம். சிற்பம், ஓவியம்போன்ற கலைப்பொருள்கள் நாளடைவில் அழிந்துவிடலாம். காலத்தின் வெப்பதட்ப நிலையால் சிற்பங்கள்போன்ற கலைப்பொருள்கள் பலவும் சீர்குலைந்து விடுவதைக் காணுகின்றோம். அஜந்தாக் குகையிலுள்ள அரிய ஓவியங்களை எவ்வளவோ கருத்துடன் நாம் பாதுகாத்தாலும் காலப்போக்கிலே அவை மங்கி மறைந்து கொண்டுதான் போகின்றன. ஆனால், இலக்கியம் இவ்வாறு அழிந்துவிடுவதில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய துறைமுக நகரம் காவிரிப்பூம்பட்டினம். இப் பட்டினத்தைப் பூம்புகார் என்றும் கூறுவார்கள். சிலப்பதிகாரத்

தில் பூம்புகார் நகரின் சிறப்பெல்லாம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என இரு பகுதிகளையுடையது புகார் நகரம். கடற்கரையை யொட்டிய பகுதிக்கு மருவூர்ப்பாக்கம் என்பது பெயர். அப் பாக்கத் தில் கூரையில்லா நிலாமுற்றங்களும், அணி செய்த அறைகளும், காற்று வருவதற்கென்று மானின் கண்போன்ற வேலைப்பாடுடைய சாளரங்களும் உள்ள மாளிகைகள் பல இருந் தன. கண்ணைக் கவரும் யவனர்களின் இருப் பிடங்கள், மரக்கலன்கள்வழி நடத்தும் வாணி கத்தால் பெருஞ்செல்வம் ஈட்டிய வெளிநாட் டவர் பலரும் கலந்து உறையும் இடங்கள் எல்லாம் கடற்கரையை ஒட்டி இருந்தன. வண்ணமும் சுண்ணமும் குளிர்சந்தனமும் பூக் களும் அகிலும் பிற வாசனைப் பொருள்களும் விற்பவர்கள் திரியும் நகர வீதிகள், பட்டு, உரோமம், பருத்தி இவற்றை நுண்ணிதாக நெய் வோர் இருக்குமிடங்கள், பட்டும் பவளமும் சந்தனமும் அகிலும் மாசறு முத்தும் மணியும் பொன்னும் அளவறியப்படாத பெருமளவில் உள்ள வளம்பெற்ற தெருக்கள் ஆகிய இவை யெல்லாம் இருந்தன.

'வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்

கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமும் சுண்ணமும் தண்ணறும் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்...'

இவ்வாறு பூம்புகார் நகரத்தின் வருணனை சிலப்பதிகாரத்தில் விரிவாய்க் காணப்படுகிறது. 'நெஞ்சையள்ளும்' சிலப்பதிகார அடிகளைப் படிக்கும்போது, பூம்புகார் நகரமே நம் கண்முன் நிற்பதுபோல் நாம் உணருகின்றோம்; உவகை எய்துகின்றோம். இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க பூம்புகார் நகரம் இன்று எங்கே? காலவெள்ளத்திலே அது கரைந்துபோயிற்று. ஆனால், அந் நகரை வருணிக்கும் இலக்கியம் அன்றுபோல் இன்றும் உள்ளது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ் நாடு எய்தியிருந்த நாகரிகத்தையும் வாழ்க்கை முறையையும் இலக்கியத்தின் வாயிலாகவே நாம் அறிகின்றோம். இலக்கியங்கள்வழி நாம் அறிந்துகொள்ளும் நமது பண்பாடு இன்றைய நம் வாழ்விற்கு வளமளிக்கின்றது. சென்ற

காலத்தின் சிறப்பினைத் தெரிந்துகொண்டு நாம் எதிர்காலச் சிறப்பிற்கு வழி வகுக்கின்றோம். இவ்வாறு, அன்றைய பண்பாட்டினை நமக்கு அறிவித்து, அதையொட்டி இன்றைய பண்பாடு வளர்ந்து வளம் பெறுதற்கு இலக்கியமே ஏற்ற கருவியாக அமைகின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்று மொழிந்த புறநானூற்றுப் புலவரின் குரலில் நம் முன்னோரின் உயர்ந்த உள்ளத்தில் உதித்த ஒப்பற்ற பொதுநோக்குக் கொள்கையைக் கேட்கின்றோம்.

திருக்குறள் கூறும் வாழ்க்கை நெறியினைப் போல் உலக நூல்கள் எதிலும் நாம் காண முடியாது. தமிழ்ப் பண்பாட்டின் தகைமைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும் திருக்குறள்.

இத்தகைய உயர்ந்த இலக்கியங்கள் இல்லையேல், நமது பண்பாட்டினை நாம் மறந்துவிடுவோம். நமது வரலாற்றுச் சிறப்பு நமக்கே தெரியாது போய்விடும். எனவே, நமது பழந்தமிழ் நாகரிகத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டுமெனில், ஒப்பற்ற தமிழ் இலக்கியங்களை நாம் கற்றல்வேண்டும். இவ்வாறு கற்பதற்கு இன்றியமையாதது தமிழ்மொழிப் பயிற்சி. நம் தாய்மொழியாகிய தமிழில் நல்ல பயிற்சியுடன் அருந்தமிழ் இலக்கியங்களை நாம் அக்கறையுடன் படித்தால்தான் பழந்தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் நாம் அறிந்துகொள்ள இயலும்.

ஆதலால், தாய்மொழிப் பற்று என்பது ஏதோ குறுகிய மனப்பான்மையில் எழும் உணர்வு அன்று. நமது நல்வாழ்விற்கு இன்றியமையாத சீரிய பண்பாகும் அது. தன்னைப் பெற்ற தாய் மீதும், தான் பிறந்த பொன்னாட்டின்மீதும் எவ்வாறு ஒருவன் பற்றுக்கொள்ளுகின்றானோ அவ்வாறே தன் தாய்மொழிமீதும் அவன் பற்றுக் கொள்ளுகிறான். தாய் அவனது உடலை வளர்த்தால், தாய்மொழி அவனது உயிரை வளர்க்கின்றது. உயிரை வளர்க்கும் உயர்வு அம்மொழிக்கு இருப்பதால்தான் அதைத் 'தாய்மொழி' என்று சிறப்பித்துக் கூறுகிறோம்.

'ஈன்ற ஒருத்தியையும், பிறந்த நாட்டையும், பேசும் மொழியையும் ஒருவன் "தாய்-தாய்-தாய்" என்று போற்றுகிறான். ஒருவனுக்குத் தன்னைப் பெற்ற தாயின்பால் எத்தகைய அன்புண்டோ, அத்தகைய அன்பு தன்னை அளித்த நாட்டினிடத்தும், தன்னை வளர்க்கும் மொழியினிடத்தும் இருத்தல்வேண்டும். நாட்டையும் மொழியையும் விரும்பாதவன் பெற்ற தாயையும் விரும்பாத பாவியாவான். பெற்ற தாயின் அன்புக்கும், பிறந்த நாட்டின் பற்றுக்கும் ஊற்றாயிருப்பது பேசும் மொழியேயாகும். பேசுந் தாய்மொழியின்மாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவான்.

'ஒரு நாட்டின் வளம், அதன் மொழியின் கொழுமை நிலையைப்பொறுத்து நிற்கிறது.

பண்டைத் தமிழ்நாட்டின் வளம் செழுமையாக இருந்ததென்றால், அதற்குக் காரணம் அந் நாட்டின் மொழி கொழுமை பெற்றிருந்தது என்று கோடல்வேண்டும்.' ('தமிழ்ச்சோலை'- முதற்பகுதி.)

காந்தியடிகளின் நெறி நின்று, இந்திய நாட்டு விடுதலைக்கென எத்தனையோ இன்னல் களை ஏற்றுப் புகழ்பெற்ற சான்றோர் மறைந்த திரு. வி. கலியாணசுந்தரனார் இவ்வாறு எழுதி யுள்ளார்.

அவர் மேலும் நமக்கு அறிவுறுத்திக் கூறு கின்றார் :

'தமிழ்மக்களே! உங்களைத் "தமிழ்மக்கள்" என்று அழைக்கச் செய்திருப்பது எது? அதை நினையுங்கள். அதை மறந்து ஆற்றப்படும் தொண்டுகள், கடைகாலில்லாமல் எழுப்பப்படும் கட்டடம் போன்றனவாகும். நீங்கள் எத் தொண்டு செய்யினும் அத் தொண்டின் அடிப் படையில் தமிழ் வேட்கையெழுச்சி இருத்தல் வேண்டும். அவ் வேட்கையால், உங்களைப் பல வாறு பிரித்துப் பிளக்க, உங்கள்பால் இடை நாளில் தோன்றிய சாதி மதப் பூசல்கள் உங் களை விடுத்து இரிந்து ஓடும். அவ்வாற்றல் அமிழ் தினும் இனிய தமிழ்வேட்கைக்கு உண்டு என் பதை மறவாதேயுங்கள் ... ... ...'

சான்றோர் திரு. வி. கலியாணசுந்தரனாரின் அறிவுரையில் அடங்கியுள்ள உண்மை என்ன?

தாய்நாட்டுப் பற்றுக்கு அடிப்படையானது தாய்மொழிப் பற்று. தாய்மொழி வேட்கையே நம்மிடை நிலவும் வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையை உண்டாக்கவல்லது. தாய்மொழிப் பற்று இல்லையேல் நாட்டுப்பற்று இல்லை; ஒற்றுமை இல்லை; உயர்வு இல்லை. ஒற்றுமைக்கு உற்ற வழி தாய்மொழிப் பற்று. உயர்வுக்கு ஏற்றமுறை தாய்மொழிப் பற்று. இஃது எவரும் மறுக்கொணாத உண்மையாகும்.

இந்த உயரிய உண்மையைக் கூறும் பாரதியாரின் பாடல்கள் ஒப்புயர்வற்று விளங்குகின்றன.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்'

என்கிறது கவிஞரின் குரல். பாரதி தமிழ் மட்டுமே கற்றவரல்லர். ஆங்கில மொழியில் அவருக்கு நல்ல பயிற்சியுண்டு. அவர் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றவர். பிரஞ்சு மொழியும் அவருக்கு ஓரளவு தெரியும். இன்னும் பிற திராவிட மொழிகளையும் அவர் அறிவார். தமிழைத் தவிர வேறு மொழி ஏதும் தெரியாதவர்கள் 'யாமறிந்த மொழிகளிலே' என்று கூறினால் அது நகைப்பிற்கிடமளிக்கும். ஆனால், திறமான பல மொழிகளைத் தெரிந்த பாரதியார்

'யாமறிந்த மொழிகளில் எல்லாம் இனியதாவது தமிழ்மொழிதான்' என்று கூறுகின்றார். தமது தாய்மொழி என்பதால்மட்டுமே தமிழைச் சிறப்பித்து அவர் பேசவில்லை. தமிழைப்போல் இனிய மொழி வேறு இல்லை என்பது அவர் கண்டறிந்த உண்மை.

'சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!'

என்று கவிஞர் பாப்பாவுக்கு அறிவுரை கூறுகின்றார்.

ஒரு மொழிக்கு உயர்வு வருவது அம்மொழியிலுள்ள இலக்கியத்தின் சிறப்பினால் தான். உயர்ந்த இலக்கியங்களைப் பெற்ற மொழி உயர்வடைகின்றது. தமிழ் மிக உயர்ந்த மொழி என்று புகழ்ந்து சொல்லிவிட்டால் மட்டுமே போதுமா? உலகத்திலுள்ள பிற மொழிகளில் இல்லாத இலக்கியங்கள் அதில் இருக்கின்றனவா? அத்தகைய இலக்கியங்கள் தமிழில் இருந்தால்தானே உலகத்தில் உள்ள மொழிகளையெல்லாம்விடச் சிறந்தது தமிழ் மொழி என்று கூறுவது பொருந்தும்? இதற்கும் பாரதியார் விடை பகர்கின்றார். வள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் ஆகியோர் இயற்றிய நூல்களைப் போன்று வேறு எந்த மொழிகளிலும் இல்லை. இத்தகைய புலவர்கள் இவ்வுலகில் வேறு எந் நாட்டிலும் பிறக்கவில்லை; இவ்வாறு

கூறுவது வெறும் புகழ்ச்சிக்காகக் கூறும் புனைந் துரையன்று என்றும் வலியுறுத்துகிறார் கவிஞர் :

‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.’

இவ்வாறு பழம்பெருமையைமட்டும் நாம் பேசிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. நமது புலமை திறமானது என்றால் அதை வெளி நாட்டினரும் மதிக்கவேண்டும். இதற்கு உற்ற வழி என்ன? பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களை எல்லாம் தமிழ்மொழியில் ஆக்கவேண்டும். அப்பொழுதுதான் நம் மக்கள் புதிய அறிவு நூல்களைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியும். அதனால், அவர்களது சிந்தனைத்திறன் வளரும். இதன் பயனாக, இறவாத புகழுடைய புது நூல்களைத் தமிழ்மொழியில் எழுதமுடியும்.

‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை ;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.’

செந்தமிழ்மொழியை அவர் அமுதம் என்கிறார்; அதன் சுவையை நுகர்ந்தோர் அமரர்களின் இன்பத்தைப் பெற்றோர் என்று கூறுகிறார்.

'தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.'

தமிழ்த்தாய் தமிழ்மக்களைப் பார்த்துக் கூறுவதாய் உள்ளது ஒரு பாடல். இப் பாடல் நம் உள்ளத்தை உருக்கி உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதாகும்.

தமிழ்த்தாய் தனது பழம்பெருமையைக் கூறுகிருள். இன்று அவள் தன் செவிகளிலே கேட்ட ஒருவன் கூறிய மொழிகளையும் எடுத்துரைக்கிருள். அதனல் வரும் இழிவினைப் போக்குவதற்கு நாம் என்ன செய்தல்வேண்டும் என்பதையும் அறிவிக்கின்ருள். தமிழ்த்தாயின் குரல் இது:

'கன்னிப் பருவத்தில் அந்நாள் — என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு — பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்!

'தந்தை அருள்வலி யாலும் — முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் — என்னை
ஊறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.'

தமிழ்த்தாய் வளர்ந்துவந்த அந் நாளில், கன்னிப்பருவத்தில் இருந்த முன்னளில், பேசப்பட்டுவந்த எத்தனையோ மொழிகள் மறைந்து வழக்கொழிந்தன. ஆனல், புலவோர் இயற்றிய இலக்கியத் திறனல் தமிழ்த்தாய் வாழ்ந்து வருகின்ருள்.

வாழ்ந்தால்மட்டும் போதுமா? வளத்தோடு வாழவேண்டுமல்லவா? பிறர் மதிக்க வாழ வேண்டுமே! 'பிறர் இழித்துப் பேசும் நிலையிலன்றோ நான் வாழ்கின்றேன்!' என்கிறாள் தமிழ்த்தாய். அந்த இழிசொல் என்ன? 'புதிய புதிய கலைகளும், பஞ்சபூதங்களைப்பற்றிய அறிவியலும் மேலைநாடுகளில் வளருகின்றன. அந்தக் கலைகள் தமிழில் இல்லை' என்று ஒருவன் கூறுவது தமிழ்த்தாயின் செவிகளிலே விழுகின்றது. இஃது இன்று உள்ள நிலையைச் சொல்லுவதுதான். இதையும் தமிழ்த்தாய் பொறுத்துக்கொண்டாள். ஆனால், இன்னொரு இழிசொல்லை அவன் சொன்னான். அதுதான் தமிழ்த்தாயின் உள்ளத்தை உலுக்கியது. அதைக் கேட்டதும் உயிரே போய்விடும்போல் இருந்ததாம் தமிழ்த்தாய்க்கு. அந்த இழிசொல் என்ன?

'மேலைநாட்டுக் கலைகளையெல்லாம் கூறும் திறமை தமிழ்மொழிக்கில்லை. எனவே, அவற்றைத் தமிழிலே சொல்ல முடியாது. புத்தம் புதிய அறிவியல் நூல்களைத் தமிழிலே இயற்ற இயலாது. ஆதலால், மெல்லமெல்லத் தமிழ் மொழி இறந்துவிடும். மேலைநாட்டு மொழிகள் தாம் இனி உலகில் ஓங்கி வளருவன.' - இவ்வாறு அவன் கூறினானும்.

இதைக் கேட்ட தமிழ்த்தாய்க்குத் துயரம் தாங்கவில்லை. இதைக் கூறியவனைப் 'பேதை'

என்கிருள் அவள் ; 'கூறத்தகாதவன் கூறிய வார்த்தை' என்று சீறுகின்ருள். 'இந்த வசை எனக்கு எய்தலாமா?' என்று உருக்கமாக வினவுகின்ருள்.

'இன்ெருரு சொல்லினைக் கேட்டேன் — இனி
ஏது செய்வேன் ? என தாருயிர் மக்காள் !
கொன்றிடல் போலொரு வார்த்தை — இங்குக்
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர் !

'புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

"சொல்லவும் கூடுவ தில்லை — அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை ;
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

'என்றந்தப் பேதை உரைத்தான் — ஆ !
இந்த வசையெனக் கெய்திட லாமோ?'

என்று மனம் புழுங்கிய தமிழன்னை இந்த வசையைப் போக்குவதற்கான வழியினைத் தன் மக்களுக்குக் கூறி ஆணையிடுகின்ருள். தமிழன்னையின் அந்த ஆணை என்ன ?

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு
[சேர்ப்பீர் !'

இது கவிஞரின் வாயிலாய்த் தமிழ்த்தாய் அனைவருக்கும் இடும் கட்டளையாகும்.

'சொல்லவும் கூடுவ தில்லை — அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை'

என்றால் அதன் உண்மைப் பொருள் என்ன? அறிவியல் நூல்களைத் தமிழில் ஆக்குந்திறமை தமிழர்களுக்கு இல்லை என்பதுதானே அந்த வசையின் உட்பொருள்! பாரதியார் காலத்தில் இந்த வசையினை உரைத்தவர்களின் கால்வழியினர் இன்னும் நம் நாட்டில் உள்ளனர். 'அறிவியற் கல்வியைத் தமிழில் கற்பித்தல் இயலாது' என்று மார்தட்டிக் கூறுவோர் நம்மிடையே இன்றைக்கும் இருக்கின்றனர். ஆங்கிலத்தில் அறைகுறை அறிவு, தமிழிலோ அதைவிடக் குறைவு என்னும் நிலையிலுள்ளோர்தாம் இந்த வசையினை இடைவிடாது கூறிவருகின்றனர். எனவே தான், இவர்களைப் 'பேதை' என்றும், 'கூறத் தகாதவன்' என்றும் இழித்துப் பேசுகின்றார் பாரதியார்.

திருக்குறளும் சிலப்பதிகாரமும் சங்க கால நூல்களும் இயற்றப்பட்ட காலத்தில் ஆங்கிலம், பிரஞ்சுபோன்ற மேலைநாட்டு மொழிகள் தோன்றக்கூட இல்லை. இன்று அம் மேலை நாட்டு மொழிகளே அறிவியலுக்கு உறைவிடமாய் உள்ளன. ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

தமிழ்மொழியைத் தாய்மொழியாய்க்கொண்ட நம்மிடமுள்ள குறைபாட்டால்தான் இந் நிலை தோன்றியது.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'

என்னும் கட்டளையை,

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு
[சேர்ப்பீர்!'

என்று தமிழ்த்தாய் இட்ட ஆணையை நிறைவேற்றுவதில் நாம் முழுவதுமாக இன்னும் முனையவில்லை. முழுமூச்சுடன் நாம் இம் முயற்சியில் இறங்கவில்லையெனில்,

'மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்'

என்று கூறத்தகாதவன் கூறிய வசைமொழி பலித்துவிடும். நம் தமிழ்மொழி கல்விமொழியாகாமல் கடைத்தெரு மொழியாகவும், நாட்டுமொழியாகாமல் வீட்டு மொழியாகவும் அடங்கிவிடும்; முடிவில் அஃது அருகிவிடும்.

எனவே, பாரதி பாடிய தமிழ்த்தாயின் துடிப்பு ஒவ்வொரு தமிழ்மகனின் உள்ளத் துடிப்பாக ஒலிக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் வளரும்; தமிழ்ப் பண்பாடு வளரும்; தமிழ் மக்களாகிய நாமும் வளருவோம்.

தமிழ்த்தாயின் வேதனைக்குரல் கேட்ட பாரதியார் தமிழ்த்தாயை வாழ்த்துகின்றார் :

'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!'

விரைவிலேயே அறிவியல் நூல்களும் மற்றக் கலைகள்பற்றிய நூல்களும் தமிழில் எழுதப் பெறும் என்னும் நம்பிக்கை கவிஞருக்குப் பிறக்கின்றது. வானளாவும் அறிவுகளனைத்தும் தமிழிலே வந்தமைந்து வளரும் தமிழ்மொழி வாழ்க என்கின்றார் :

'வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

எங்கள் தமிழ்மொழி என்றும் வாழ்க என்று வாழ்த்துகிறது, தமிழ் நெஞ்சம்படைத்த தமிழ்க் கவியின் தளர்வறியாக் குரல் :

'எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!'

தமிழ்மொழியின் வாழ்வே தமிழர்களின் வாழ்வு, தமிழ்மொழியின் வளமே தமிழர்களின் வளம் என்னும் உண்மையை உணர்ந்த கவிஞர் தமிழ்மொழியை வாழ்த்தித் தமிழ் மக்களை வாழ்த்துகிறார்.

# 5. பாரத சமுதாயம்

பாரதநாட்டின் இயற்கை வளங்களையும் பழம்பெருமையையும் பாடியதோடு பாரதியார் நின்றுவிடவில்லை. பாரதநாடு முழுதையும் ஒரே சமுதாயமாக அவர் காண்கின்றார்.

தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோரைக் கொண்டதைக் குடும்பம் என்கிறோம். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் இன்பத்தையும் துன்பத்தையும் அக் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் தம் இன்பமாகவும் துன்பமாகவும் கொள்ளுகின்றனர். மகனுக்கு நோய் என்றால் தாய் வருந்துகிறாள். அண்ணனுக்கு ஒரு பதவி கிடைத்தால் தம்பியரும் தங்கையரும் பெற்றோரும் மகிழ்ச்சி அடைகின்றனர். குடும்பத்தினரிடையிலுள்ள உறவால் ஒவ்வொருவரின் இன்பதுன்பங்களும் மற்றவர்களின் இன்பதுன்பங்கள் ஆகின்றன.

இத்தகைய குடும்ப உறவு பாரத நாட்டு மக்களிடையே வளரவேண்டும் என்பது பாரதியாரின் கனவு. வீட்டில் நிலவும் உறவினைக் குடும்ப உறவு என்றும், நாட்டில் நிலவும் உறவினைச் சமுதாய உறவு என்றும் கூறுகிறோம்.

ஒருவரோடொருவர் உறவுகொண்டு வாழும் மக்களின் தொகுதியைச் சமுதாயம் என்கிறோம். எனவே, பாரத மக்கள் அனைவரையும் சேர்த்து ஒரே பாரத சமுதாயமாகக் காண்கிறார் கவிஞர்.

> 'பாரத சமுதாயம் வாழ்கவே! — வாழ்க வாழ்க
> பாரத சமுதாயம் வாழ்கவே!'

பாரதியார் வாழ்ந்த நாள்களில் பாரத நாட்டு மக்களின் தொகை முப்பது கோடியாக இருந்தது. இம் முப்பது கோடி மக்களும் சேர்ந்த சமுதாயம் உலகத்திற்கே புதுமையானது. பாரத நாட்டில் வாழ்வோர் ஓரினத்தவரல்லர்; ஒரு சமயத்தினரல்லர்; ஒரு மொழி பேசுவோருமல்லர். இமயமலைப் பகுதியில் வாழும் மக்களும் நாட்டின் தென்பகுதியில் வாழும் மக்களும் நிறத்திலும் தோற்றத்திலும் வேறுபட்டவர். இத்தகையாரைப்போன்ற பல இன மக்களைக்கொண்டது பாரதம். பல சமயத்தினரும் பாரதத்தில் வாழ்கின்றனர். இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள், இசுலாமியர்கள், கிருத்தவர்கள்போன்ற பற்பல சமயத்தைச் சார்ந்தோர் இந்திய நாட்டில் உள்ளனர். நாட்டில் பல மொழிகள் நிலவுகின்றன. இவ்வாறு இனம், மொழி, சமயம் என்னும் வகைகளில் வேறுபட்டிருக்கும் பாரதமக்கள் அனை

வரும் ஒரே சமுதாயமாக இருப்பது ஒப்பில்லாத தொன்ருகும். அஃது உலகத்துக்கே ஒரு புதுமையாகும் என்கிருர் பாரதியார்.

'முப்பது கோடி சனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை.'

ஒரு குடும்பத்தில் வாழ்வோருள் சிலர் மேலானவர், சிலர் கீழானவர் என்று இருப்பதில்லை. அதுபோல் பாரத சமுதாயத்தில் வாழ்வோருள் ஏற்றத்தாழ்வு இல்லை. இனத்திலும் குலத்திலும் ஒருவருக்கொருவர் மேம்பட்டவர் என்னும் நிலை கூடாது என்கிருர் பாரதியார். இந்திய மக்கள் எல்லாருமே ஒரே குலத்தைச் சேர்ந்தவர்; ஒரே இனத்தைச் சேர்ந்தவர். அவர்கள் அனைவரும் இந் நாட்டு மன்னர்.

'எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.'

மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் சனநாயக நாட்டிலே அரசன் என்று எவரும் இல்லை. மக்களாட்சியிலே மக்கள் ஒவ்வொருவரும் மன்னர் ஆகிவிடுகின்றனர்.

எல்லோரையும் இந் நாட்டு மன்னர் என்று கூறிவிட்டால்மட்டும் போதுமா ? பசிதீர உணவு உண்ணுவதற்கு வகையில்லாதவரை 'மன்னர்' என்று கூறுவது பொருளற்றதாகி விடுமன்ருே ? எனவே, நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்ண உணவு கிடைக்க வேண்டும். அவ்வாறு உணவு கிடைக்கவில்லையெனில், உலகமே அழிக்கப்படவேண்டும் என்று உள்ளக் கொதிப்புடன் கூறுகிருர் கவிஞர் :

'இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம் ;
தனியொருவனுக்குண வில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்.'

உலகில் பிறந்த ஒரு மனிதனுக்கு உணவு கிடைக்கவில்லையெனில் இந்த உலகம் இருந்துதான் என்ன பயன் ? அது அழிந்துபோவதே மேலன்ருே ? இதே எண்ணத்துடிப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பொய்யாமொழி புகன்ற வள்ளுவர் உள்ளத்திலும் எழுந்துள்ளது. 'உலகத்தில் பிறந்த ஒருவன் இரந்தே உயிர் வாழவேண்டும் எனில், இந்த உலகத்தை இயற்றியவனே கெடுவானுக!' என்று கூறித் தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகின்ருர் வள்ளுவர் :

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.' (குறள்—1062)

வள்ளுவருடைய உள்ளக் குமுறலின் எதிரொலியை நாம் பாரதியாரின் பாட்டிலே கேட்கின்றோம்.

ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவர் பசியால் வாடும்பொழுது அக் குடும்பத்தில் உள்ள பிறர் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அதுபோல் பாரத சமுதாயத்திலே ஒருவர் உணவின்றி இருக்கும்பொழுது பிறர் உணவுண்டு மகிழ்ந்திருப்பது சமுதாய அறமாகாது என்பது பாரதியாரின் கொள்கை.

நம் பாரதநாடு சுதந்திரம் பெற்றபின், நம் நாட்டில் எத்தகைய ஆட்சிமுறை இருத்தல் வேண்டும் என்பதைக் குறித்து அரசமைப்புச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. நமது நாட்டின் ஆட்சிக்கு அஃது அடிப்படையான சட்டம் ஆகும். அச் சட்டத்தின் முகவுரையில் நாட்டு ஆட்சியின் குறிக்கோள்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தலையாய குறிக்கோள்கள் அரசியல் நீதி, சமுதாய நீதி, பொருளாதாரநீதி என்பன.

வெளிநாட்டாரின் ஆட்சி அகன்றதன் பின் நாம் விடுதலை பெற்றாலும், நாட்டிலே மக்களாட்சி மலரவேண்டும்; அதுவே நாடு பெற்ற விடுதலையால் நாமடையும் பயனாகும்.

நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் பிற பகுதியினர்மீது ஆட்சிசெலுத்தினுல் அது மக்களாட்சி ஆகாது. எனவே, மக்கள் அனைவருக்கும் அரசியல் அதிகாரத்தில் ஒரே சீரான நிலைமை இருக்கவேண்டும். அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்தியே தேர்தலில் மக்கள் தங்கள் வாக்குகள்மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். படித்தவர்களுக்கென்றோ, பணம் படைத்தவர்களுக்கென்றோ தனி உரிமைகள் அளிக்கப்பட்டால், அது உண்மையான மக்களாட்சி ஆவதில்லை. எல்லோரையும் ஒரே நிலையில் மதித்து ஒரே வகையான ஆட்சி அதிகாரத்தை அவர்களுக்கு அளிக்கும் முறையே மக்களாட்சி முறை என்கிறோம். இதுவே அரசியலில் மக்களுக்குக் கிடைக்கும் அரசியல் நீதியாகும். இந்த அரசியல் நீதியையே,

> ‘ எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
> எல்லாரும் இந்நாட்டு மன்னர் ’

என்னும் அடிகள் எடுத்துக்கூறுகின்றன.

தேர்தலில் வாக்குரிமை கிடைத்துவிட்டால் அரசியல் நீதி ஏற்படலாம். ஆயினும், சமூக வாழ்விலே மக்களிடையே ஏற்றத்தாழ்வு இருந்தால் அது மக்களாட்சியின் மாண்பிற்கு ஏற்றதன்று. குலம், இனம் என்னும் அடிப்படையில் மக்களிலே ஒருசாரார் உயர்ந்தவர்,

ஏனையோர் தாழ்ந்தவர் என்னும் நிலை இருத்தல் கூடாது. இந்திய மக்கள் என்னும் அடிப்படையில் எல்லாரும் ஒரே குலத்தவராய், ஒரே இனத்தவராய்க் கொள்ளப்பட்டால்தான் சமுதாய நீதி மலரும்.

> 'எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
> எல்லாரும் இந்தியா மக்கள்'

என்பது இச்சமுதாய நீதியின் குரலேயாகும்.

அரசியல் நீதியால், ஆட்சியதிகாரத்தில் எல்லா மக்களுக்கும் ஒத்த பங்கு கிடைக்கிறது. சமுதாய நீதியால் மக்கள் எல்லாரும் ஒரே நிலையில் மதிக்கப்படுகின்றனர். இருந்தும் மக்கள் அனைவருக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் குடியிருக்க வீடும் இல்லையெனில், அரசியல் நீதியாலும் சமுதாய நீதியாலும் மக்கள் அடையும் பயன் யாதுமில்லை. பசியால் வாடும் மக்களிடம், 'நீங்கள் இந் நாட்டு மன்னர்' என்றும், 'நாம் அனைவரும் ஒரே குலம், ஒரே இனம்' என்றும் கூறுவது கேலிக் கூத்தேயாகும். எனவே, மக்களனைவருக்கும் உண்டியும் உடையும் உறையுளும் கிடைக்கச் செய்வது மக்களாட்சி முறையின் மாண்புமிக்க கடமையாகின்றது. இதனைத்தான் அரசியல் சட்டம் பொருளாதார நீதி என்கிறது. இப் பொருளாதார நீதி இல்லையேல், அரசியல் நீதியால் அடையும் பயன் ஏதுமில்லை. சமுதாய

நீதியால் வரும் பயன் யாதுமில்லை. இத்தகைய பொருளாதார நீதியை வலியுறுத்திக் கூறுகின்றார் கவிஞர்:

'இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடு வோம்.'

இவ்வாறாக, நம் நாட்டு இன்றைய அரசமைப்புச் சட்டத்திலே ஏற்றமுடன் எழுதப்பட்டுள்ள அரசியல் நீதி, சமுதாய நீதி, பொருளாதார நீதி என்னும் மூவகை நீதிகளையும் அன்றே அழகாகவும் ஆணித்தரமாகவும் பாடியுள்ளார் பாரதியார்.

பாரத சமுதாயம் ஒற்றுமையின்றி இருந்ததால்தான் அந்நியர் பலரும் நம் நாட்டின்மீது பலமுறை படையெடுத்து வெற்றிகொண்டனர். அண்மையில் நம்மை அடிமைப்படுத்தி ஆண்டு வந்த ஆங்கிலேயர் முதலில் வணிகர்களாகவே இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் வந்த பதினேழாம் நூற்றாண்டில் பாரதநாடு பல அரசுகளாகப் பிரிந்து கிடந்தது. அவ்வரசர்கள் தமக்குள் ஒற்றுமையின்றிப் போரிட்டுவந்தனர். வாணிகம் செய்ய வந்த அந்நியர்கள் நாட்டில் நிலவிய இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, உள்நாட்டு அரசர்களுக்குள் எழுந்த பகைமையை வளர்த்து, ஒருவருக்கொருவர்

சண்டையிடச் செய்தனர். முடிவில் உள்நாட்டு மன்னர் பலர் வலியிழந்தனர். இதனுல்தான், ஆங்கிலேயர் சிறுசிறு படைகளை வைத்துக் கொண்டு பாரதம் முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர முடிந்தது. இவ்வாருக இந்தியரைவைத்தே இந்தியரை வென்று இறுதியில் ஆங்கிலேயர் பாரத நாட்டை அடிமைகொண்ட வரலாற்றை நன்கு அறிந்திருந்தார் பாரதியார். எனவே, பாரத நாட்டினர் அனைவரும் ஒற்றுமையாய் வாழவேண்டும் என்பதை அவர் வலியுறுத்திக் கூறுகிருர்.

முப்பது கோடி மக்கள் இருந்தாலும் பாரதத் தாயின் உயிர் ஒன்றுதான்; மக்கள் பதினெட்டு மொழிகளைப் பேசினுலும், பாரதத் தாயின் சிந்தனை ஒன்றுதான் என்கிருர் பாரதி:

> 'முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
> மொய்ம்புற வொன்றுடை யாள் – இவள்
> செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
> சிந்தனை ஒன்றுடை யாள்.'

நம் நாட்டிற்கு மேன்மை பல வந்தாலும் அவை முப்பது கோடி மக்களுக்கும் பொதுவாகும். எனவே, வாழ்வது என்ருல் அனைவரும் வாழ்வோம்; வீழ்வது என்ருல் அனைவரும் வீழ்வோம். சிலர் வாழ்வது, பலர் வீழ்வது என்னும் நிலை கூடாது என்கிருர் கவி:

'எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.'

நாட்டினர் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்தால்தான் நமக்கு நல்வாழ்வு; இல்லாவிடில் அனைவருக்கும் தாழ்வுதான். இந்த ஞானம் நமக்கு வந்துவிடில், வேறெதுவும் நமக்கு வேண்டா.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?'

இவ்வாறு, அரசியல் வாழ்வு, சமூக வாழ்வு, பொருளாதார வாழ்வு ஆகியவற்றில் நீதியும், ஒற்றுமையுணர்வும் உள்ள மக்களைக் கொண்ட ஒப்பற்றதோர் அமைப்பாய்ப் பாரத சமுதாயத்தினைப் பாரதியார் கண்டார்.

# 6. சாதிக் கொடுமை

உலகில் இன்று வளமும் வலிவும் கொண்ட நாடாய் அமெரிக்க ஐக்கிய நாடு விளங்குகிறது. வட அமெரிக்கக் கண்டத்தின் நடுவில் மிகப் பெரிய நிலப்பரப்பினை உடையது இந் நாடு. இந்த நாட்டின் வரலாறு இற்றைக்கு ஏறத்தாழ மூந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் தொடங்குகிறது.

'புதிய உலகம்' என்று கருதப்பட்ட இந்த அமெரிக்க நாட்டில் ஆங்கிலேயர் சிலர் பதினேழாம் நூற்றுண்டில் குடியேறினர். நாளடைவில் பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன் முதலிய ஐரோப்பிய நாடுகளிலிருந்து பலர் இங்குக் குடியேறினர். புதுவாழ்வு நாடி வந்த ஐரோப்பிய மக்கள் தங்கள் உழைப்பாலும் ஊக்கத்தாலும் புதிய நாட்டினைப் பொலிவுறச் செய்தனர். இந்தப் பல நாட்டு மக்களின் கலந்த வாழ்விலே கனிந்து பிறந்ததே இன்று விளங்கும் அமெரிக்கச் சமுதாயம்.

அன்று குடியேறிய ஆங்கிலேயர் ஆங்கிலேயராயும், பிரஞ்சுக்காரர் பிரஞ்சுக்காரராயும், ஜெர்மானியர் ஜெர்மானியராயும் தனித்து வாழ்ந்துவந்திருந்தால், இன்றைய வளம் பெற்ற

அமெரிக்கச் சமுதாயத்தை நாம் காணமுடியாது. அச் சமுதாயத்திற்கு வளமும் வலிவும் சேர்ந்த தற்குக் காரணம் பல நாட்டு மக்களும் தங்கள் இனப்பிரிவுகளையும், மொழி வேறுபாடுகளையும் மறந்து, ஒருவரோடொருவர் கலந்து வாழ்வது தான். இந்த இணைந்த வாழ்விலேயே அம் மக்கள் ஏற்றமுற்றனர்.

நம் நாட்டின் நிலையென்ன? ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளாய் இந் நாட்டில் வாழும் நம் மிடையே எத்தனையோ பிரிவுகள் உள்ளன. சாதி என்னும் பெயரால் நமது சமுதாயம் பல பிளவுகளைக் கொண்டுள்ளது. இணைந்து வாழ்ந்த அமெரிக்க மக்கள் ஏற்றமுற்றனர்; இணையாது வாழும் நாம் அத்தகைய ஏற்றம் பெறவில்லை. சாதிப்பிரிவுகளைக் கொண்ட நம் சமுதாயம் வலி விழந்தது; பொலிவிழந்தது; அயலார்க்கு அடிமையாகியது. இந் நிலையைக் கண்ட பாரதி யார் மனம் பதைத்தார். சாதிப் பிரிவுகள் என்னும் நோயால் நம் நாடு நலிந்துபோனதை நினைத்து நினைத்து அவர் வருந்தினர்.

சாதியுணர்வு என்னும் அறியாமையை அகற்ற வேண்டும் என்னும் உறுதி கவிஞரின் உள்ளத்திலே எழுந்தது. வயதிலே முதிர்ந்த வர்கள் சாதியுணர்வு என்னும் குட்டையிலே ஊறிப் போனவர்கள்; அவர்களைத் திருத்தமுடி யாது. எனவே, சிறுவர்களின் உள்ளங்களி

லாயினும் சாதிகள் இல்லை என்னும் உண்மை பதியட்டும் என்று நினைத்துப் ' பாப்பாப் பாட்டு ' என்னும் சிறுவர்களுக்கான பாட்டிலே அவர் கூறுகின்றார் :

' சாதிகள் இல்லையடி பாப்பா ! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.'

மக்களைச் சாதியின் அடிப்படையில் மேலென்றும் கீழென்றும் பிரிப்பது பாவச் செயல் என்கிறார் கவிஞர்.

மக்களுள் மேலோர் கீழோர் என்னும் பிரிவு உண்டு. ஆனால், அது சாதி அடிப்படையில் அன்று. ' இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர் ' என்று இரு சாதிகளே உண்டு எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் கூறியதை ஏற்று நம் கவிஞரும் பாடுகின்றார் :

' சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல்
[அமிழ்தமென்போம் ;
நீதி நெறிநின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர் ; கீழவர் மற்றோர்.'

'நல்ல சிவப்பு நிறமுள்ளவர்களை மேல்சாதி என்றும், கறுப்பு நிறத்தவர்களைக் கீழ்ச்சாதி என்றும் வைத்தார்களோ ?' என்று தமது பாப்பாப் பாட்டைக் கேட்ட பாப்பா வினவுவதாகப் பாரதியார் கற்பனை செய்து, அதற்கும் அவர் விடையளிக்கின்றார். வீட்டிலே வெள்ளை

நிறத்தில் ஒரு பூனை வளருகின்றது. அது குட்டிகளை ஈன்றது. அக் குட்டிகள் வெள்ளை, கறுப்பு, சாம்பல் நிறங்களில் இருந்தன. நிறவேறுபாட்டால் அப் பூனைக்குட்டிகள் தரத்தில் வெவ்வேறு ஆகிவிடுமா? ஆவதில்லை. இதுபோல், மனிதர்களும் நிறத்திலே வேறுபட்டாலும் திறத்தில் வேறுபடுவதில்லை. இவ்வாறு, தக்கதோர் எடுத்துக்காட்டைக் கூறி, நிறத்தைவைத்து மக்களுக்குள் வேறுபாடு காட்டுவது மடமை என்று கவிஞர் அறிவுறுத்துகின்ருர் :

'வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை; – அவை
பேருக் கொருநிற மாகும்.

'சாம்பல் நிறமொரு குட்டி, – கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி, – வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

'எந்த நிறமிருந்தாலும் – அவை
யாவும் ஒரேதர மன்ருே?
இந்த நிறம்சிறி தென்றும் – இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ?

'வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் – இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.'

நம் நாட்டிலே, சமுதாய வாழ்வு முறை தொடங்கிய நாள்களில் சமுதாயத்திற்கு

வேண்டிய வெவ்வேறு தொழில்களை வெவ்வேறு மக்கள் செய்திருக்கலாம். அந்தந்தத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் பரம்பரையாக அத் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். இவ்வாறு, செய்த தொழிலுக்கேற்பச் சமுதாயத்திலே மக்கள் வகைப்படுத்தப் பட்டிருக்கலாம். இப்பொழுதோ நிலை மாறிவிட்டது. எவரும் எந்தத் தொழிலையும் செய்யவேண்டிய நிலை இன்றுள்ளது. எனவே, செய்யுந் தொழிலை வைத்து மக்களை வகைப் படுத்தல் இன்று இயலாது. இவ்வாறிருக்க, சாதிப் பிரிவுகளைப் பேணுதல் எவ்வளவு அறியாமை!

ஒரு குடும்பத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டுபவன் தந்தை. வீட்டுக் காரியங்களைச் செய்பவள் தாய். இவர்கள் இடும் ஏவல்களைச் செய்வோர் பிள்ளைகள். இவர்கள் எல்லாரையும் கொண்டதுதான் குடும்பம். இக் குடும்பத்தினரில் எவரையாவது மேலோர் என்றும் கீழோர் என்றும் பிரிக்கமுடியுமா? இவர்கள் பிரிவு கூறிச் சண்டையிடுவது எவ்வளவு மடமையோ அவ்வளவு மடமை சமுதாயத்தைச் சாதிகள் எனப் பிரிப்பது என்று கவி பாடுகின்றார்:

'ஒற்றைக் குடும்பந் தனிலே – பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே – மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை;

'ஏவல்கள் செய்பவர் மக்கள் ; – இவர்
யாவரும் ஓர்குலம் அன்ருே ?
மேவி அனைவரும் ஒன்ருய் – நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

'சாதிப் பிரிவுகள் சொல்லி – அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் – அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.'

அமெரிக்க நாட்டின் குடிமகனுயுள்ள ஒருவன் தன்னை 'அமெரிக்கன்' என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகிருன். பிரான்ஸ் நாட்டில் பிறந்தவன் பிரஞ்சுக்காரன் என்பதில் பெருமை யடைகிருன். ஜப்பானில் பிறந்தவர் ஜப்பானியர் என்னும் நிலையில் சமமாக உள்ளவரே அல்லாமல் அவருக்குள் ஏற்றத்தாழ்வு இல்லை. அந்தந்த நாட்டுக் குடிமக்கள் தம் நாட்டின் உயர்விற்கென முழுமனத்தோடு உழைக்கின்றனர். அந்த நாட்டைத் தம் குடும்பம்போலப் பாவிக்கின்றனர். நாட்டுப் பற்றும் அவர்களிடம் மிகுதியாய் உள்ளது.

ஆனுல், நம் நாட்டின் நிலையோ மாறுபட்டிருக்கிறது. நாடு நம்முடையது என்னும் எண்ணத்தில் உறுதியின்றிச் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருப்போர் வாழ்கின்றனர். நாட்டின் முன்னேற்றத்தில் பெரும்பாலோருக்கு அக்கறை இருப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டுமெனில், நம் சமுதாயத்தைப் பிடித்திருக்கும் சாதி என்னும் கொடிய நோய் தீரவேண்டும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் கூறிய வாய்மொழியை நம் மக்கள் மறந்தனர். பிறப்பினால் ஏற்றத் தாழ்வினைத் தங்களிடையே கற்பித்துக் கொண்டனர். எனவே சாதிகள் நிலைத்தன; சமுதாயம் பிளவு பட்டது; ஒற்றுமை மறைந்தது; உண்மையறிவு நலிந்தது. பாரதியார் காலத்தில் இருந்த இந் நிலை இன்றும் மாறியபாடில்லை.

சாதிகள் இல்லை என்று நாம் சட்டம் இயற்றி விட்டோம். சாதி, இனம், சமயம் இவற்றின் அடிப்படையில் மக்களிடம் அரசு வேற்றுமை காட்டுவது கூடாது என்று நம் நாட்டு அரசமைப்புச் சட்டம் அறுதியிட்டுக் கூறுகின்றது. ஆனால், சட்டங்களால்மட்டுமே மக்கள் மனம் மாறிவிடுவதில்லை. தலைமுறை தலைமுறையாய் வந்த சாதியுணர்வு பெரும்பாலான மக்களின் மனத்தை விட்டு முழுவதுமாய் இன்னும் அகன்றபாடில்லை. இதை அகற்றுவது இன்றைய இளைஞரின் இன்றியமையாக் கடமையாகும்.

சமுதாய நல்வாழ்வு என்னும் இளஞ் செடியின் ஆணிவேரை அரித்து அழிக்கும் புழுவாய்ச் சாதியுணர்வு என்னும் பெருந்தீமை இன்றும் உள்ளது. இச் சாதியுணர்வு மக்கள் மனத்தை விட்டு அறவே ஒழியாதவரை சமுதாய நல்வாழ்வு என்னும் செடி தழைத்து வளராது; தக்க பலனையும் தாராது.

பொய்யான சாத்திரங்களின் துணைகொண்டே சாதிப்பிரிவுகள் எழுந்தன என்பதை உணர்ந்த பாரதியார், இப் பொய்மைச் சாத்திரங்களால் மக்கள் புழுக்களைப்போல வாழ்ந்து மடிகின்றனரே என்று வருந்துகிறார்.

'சாத்திரங் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்
சாத்திர மின்றேற் சாதி யில்லை;
பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்
பொய்மை யாகிப் புழுவென மடிவர்.'

சந்திரனுக்குச் சென்று திரும்பும் மனிதர்களைக்கொண்ட இந்த அறிவியல் காலத்திலே, நாம் இன்னும் பொய்ச் சாத்திரங்களை நம்பி இருந்தோமானால் நமக்கு உய்வேது? பொய்மைச் சாத்திரங்களை நம்பினால் நாம் புழுக்களாய் வாழ்ந்து மடியவேண்டியதுதான் என்று பாரதியார் விடுக்கும் எச்சரிக்கை நமது அறியாமைக் கண்களைத் திறக்கவேண்டும். அப்பொழுதுதான் அறிவியல் உலகில் வாழும் தகுதி நமக்கு வரும். இல்லையேல், அறிவியல் உலகம் நம்மைப் புறக்கணித்து விடும். எனவே,

'சாதிக்கொடுமைகள் வேண்டா — அன்பு
தன்னில் செழித்திடும் வையம்'

என்னும் பாரதியாரின் பாடலை நாடெங்கும் பரப்பி, சாதியுணர்வு என்னும் நச்சுக் கிழங்கை மக்கள் மனத்திலிருந்து அகழ்ந்து எடுத்து அகற்றுவது நம் அனைவரின் கடனாகும்.

## 7. பெண்ணுரிமை

சாதியுணர்வு எவ்வாறு நம் நாட்டுக்குத் தீமை பயக்குமோ அவ்வாறே நம் சமுதாயத்தில் பெண்களை அடிமைகளாய் நினைத்து அடக்கி வைப்பதும் தீமை பயக்கும் என்பதைப் பாரதியார் கண்டார்.

ஆண்களும் பெண்களும் வெவ்வேறுன இயல்புகளோடும் திறமைகளோடும் விளங்குகின்றனர். வில்லெடுத்தும் வாளெடுத்தும் போர் இடுவதற்குப் போதிய உடல்வலிவும் உள்ளத் திறனும் இன்றிப் பெண்கள் இருக்கலாம். ஆனால், மழலைச் செல்வங்களிடம் அன்புகாட்டி ஆதரவுடன் வளர்க்கும் கலையறிந்தவர் பெண்பாலர். வாழ்வானுக்கு இன்றியமையாதவளாய்ப் பெண் இருப்பதால்தான் அவளை 'வாழ்க்கைத் துணை' என்று வள்ளுவர் சிறப்பித்துக் கூறுகின்றார். பெண்களின் நற்பண்புகளை அவர் 'மனைமாட்சி' என்கின்றார். இந்த மனைமாட்சியே வாழ்க்கைக்கு மங்கலமாகும் என்பது பொய்யாமொழி.

சமுதாய வாழ்க்கை என்னும் சகடம் ஆண் பெண் என்னும் இரு சக்கரங்களைக் கொண்டே ஓடுகின்றது. இரு சக்கரங்களில் எது இல்லை

யாயினும் வாழ்க்கை வண்டி முன்னேற முடி யாது. இந்த இரு சக்கரங்களில் ஒன்ருன பெண் சக்கரம் வண்டியிலிருந்து எவ்வாருே அகற்றப்பட்டது. அன்றிலிருந்து நம் சமுதாய முன்னேற்றம் தடைபட்டு நின்றுவிட்டது. சில நாடுகளில் சமுதாய வாழ்வு முன்னேற்றம் அடைந்திருக்க நம் நாட்டில் அது பின்தங்கி நிற்பதன் காரணம் பெண்கள் தங்கள் உரிமை களை இழந்து வாழ்வதுதான் என்பதைப் பாரதி யார் கண்டார்.

'பிறந்த பெண் முதலில் தந்தைக்கு அடிமை; பின் கணவனுக்கு அடிமை ; அதன் பிறகு தன் மகனுக்கு அடிமை' என்று சாத்திரம் கூறு வதைச் சட்டமாக்கி விட்டனர் இடைக்காலத் தில் நம் மக்கள். நம்மை ஆண்டுவந்த ஆங்கிலே யரும் இந்த அடிப்படையிலேயே நீதி செலுத்தி வந்தனர். இந்துப் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை என்று சட்டம் இருந்தது. ஒருவர் விட் டுச் செல்லும் சொத்திலே ஆண்பிள்ளைக்குப் பங்கு உண்டு ; மனைவிக்குப் பங்கு இல்லை. தன் கணவன் சொத்திலிருந்து தனது வாழ்க்கைக்கு வேண்டும் பொருளைப் பெறும் உரிமை மட்டுமே அவளுக்கு இருந்தது. பெண்களுக்குக் கிடைக் கும் சொத்திலும் முழு உரிமை அவளுக்கு இல்லை. தன் ஆயுள் வரை அதை அவள் துய்க்கலாம் ; அதன்பின் அது வேறு ஆண் வழியினரையே சேரும். இவ்வாறு அன்று

சட்டங்கள் இருந்தன. இப்பொழுது அத்தகைய சட்டங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

அந் நாளில் பெண்களுக்குக் கல்வியளிப்பது கூடாது என்னும் கொள்கை நிலவி வந்தது. ஒளவை மூதாட்டி பிறந்த நாட்டில் பெண்கள் கல்வி கற்பது தடைசெய்யப்பட்டது. வீட்டை விட்டு வெளியில் வாராமல் பெண்கள் உள்ளேயே அடங்கிக்கிடந்தனர். நாணமும் அச்சமும் பெண்களுக்கு அணிகலன் என்று கூறப்பட்டன.

இறந்த கணவனின் உடலோடு அவன் மனைவியையும் வைத்துக் கொளுத்தும் வழக்கம் நம் நாட்டில் இருந்தது. ராஜா ராம் மோகன் ராய் என்னும் பெரியார் இக் கொடிய வழக்கத்தைத் தடுப்பதற்கெனச் சட்டமியற்றுவதற்கு முயன்று வெற்றிபெற்றார். பெண்கள் விடுதலைக்கென்று அப் பெரியார் எவ்வளவோ பாடுபட்டார். இருப்பினும் பெண்களின் நிலை மாறவில்லை. சமுதாய முன்னேற்றத்திற்குப் பெண்கள் விடுதலை இன்றியமையாதது என்னும் உண்மையை உணர்ந்த பாரதியார் அதுபற்றி உணர்ச்சி மிக்க பாடல்களை இயற்றியுள்ளார் :

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்'

என்கிறது அவரது சீற்றம்.

'புதுமைப் பெண்' ஒருத்தியைக் கற்பனையில் உருவாக்கி அவள் வாயிலாகப் பாடுகின்றார்

பாரதி; அந் நங்கை கூறும் நவீனங்களைக் கேளுங்கள் என்கிறார்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்'

என்று 'பெண்மைத் தெய்வம்' பேசுகின்றது.

'திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'

என்பது உதய கன்னியின் உரை.

'உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்தங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்'

என்கிறாள் புதுமைப் பெண்.

'மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பதும்,
மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பதும்'

இளைய நங்கையின் எண்ணங்கள் ஆகின்றன.

சங்க காலத்திலும் வேதகாலத்திலும் பெண் புலவர் பலர் இருந்தனர். அன்னார் ஆற்றிய அறிவுரை சங்கப் பாடலாகவும் உபநிடதமாகவும் இன்றும் உள்ளன. அந்த நாள்களில் ஆண்களோடு சரி நிகராக இருந்து முன்னேறிய பெண்

பாலர் இடைக்காலத்தில் இந்த நிலைக்கு இழுத்துச்செல்லப்பட்டனர் என்பதைக் கவிஞர் எடுத்துக்கூறுகிறார்.

'வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்;
கலியழிப்பது பெண்களறமடா!
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்'

என்று பாடிப் பெண்களை வாழ்த்துகின்றார் பாரதியார்.

கற்பு என்னும் பண்பினைப் பெண்கள்மட்டுமே பேணுதல் வேண்டுமென்ற கொள்கையைப் பாரதியார் வலிமையாகக் கண்டிக்கின்றார். கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பண்பாய் இருத்தல்வேண்டும்.

'கற்பு நிலையென்று சொல்ல வந்தார்—இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்'

என்று அவர் கூறுகின்றார்.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!'

என்று பாரதியார் தம் கற்பனையில் காண்கின்றார். சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் சட்டங்கள் செய்வதற்குப் பெண்கள் அமர்ந்திருக்கும் இந் நாளில், இந்திய நாட்டின் பிரதம அமைச்சரே பெண் குலத்தவராய் உள்ள இன்று,

இப் பாடலில் உள்ள புரட்சியும் புதுமையும் தெரியாமல் போகலாம். ஆனால், அன்றிருந்த நிலையில் 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பெண்கள்' என்று கூறுவதற்கே எவ்வளவோ மனவுறுதி வேண்டும். வரவிருப்பதைக் கண்டு பாடும் வரகவியால்தான் அன்று இவ்வாறு பாடியிருக்க முடியும்.

'காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி!'

என்று பெண்கள் விடுதலைக் கும்மி ஒலிக்கின்றது.

அறிவியல் பெரிதும் வளர்ந்துள்ள இந்நாளிலுங்கூட நம் நாட்டிலுள்ள பெண்கள் முழு உரிமை பெற்றுள்ளனர் என்று கூறுவதற்கில்லை. ஆசைத்துணையாகவன்றி, பெண்களை அறிவுத் துணையாகக் கொள்வோர் ஆண்களில் சிலரே இன்று உள்ளனர்.

## 8. கைத்தொழிலும் கலையறிவும்

நம் இந்திய நாட்டை ஆண்டு வந்த ஆங்கிலேயர் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வணிகராகவே இங்கு வந்தனர் என்று கண்டோம். அந் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில் பெருகத் தொடங்கியது. புதியபுதிய இயந்திரங்கள் அங்குக் கண்டுபிடிக்கப் பெற்றன. மேலைநாடுகளில் நிலவிய அறிவியலும் இயந்திரத் தொழில் வளர்ச்சியும் அந் நாடுகளை உலகில் வலிமை மிக்க நாடுகளாய் ஆக்கின. அந்த வலிமைகொண்டு உலகில் பல நாடுகளை ஐரோப்பிய நாட்டினர் வென்று ஆண்டு வந்தனர்; தம் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் தம் நாட்டுக் கைத்தொழிற்பொருள்களை விற்பனை செய்தனர். மேலைநாடுகளின் கைத்தொழில் வளர்ச்சியால் ஆக்கப்பட்ட பொருள்களுக்கு, அந் நாடுகளின் ஆதிக்கத்திற்கு அடங்கியிருந்த கீழை நாடுகள் வாணிகக் களங்கள் ஆயின. நம் நாட்டை ஆண்டு வந்த ஆங்கிலேயரும் தம் நாட்டுக் கைத்தொழிற் பொருள்களை விற்கும் வாணிகக் களமாகவே இந்திய நாட்டைப் பயன் படுத்திவந்தனர்.

இதன் பயனாய் இந்திய நாட்டுக் கைத் தொழில்கள் நலிந்துபோயின. மக்கள் வாழ்

வில் உணவுக்கு அடுத்து இன்றியமையாதது உடை. இவ்வுடைக்கு வேண்டிய துணிகளை நெய்யும் தொழிலில் நம் நாடு சிறப்புப் பெற்றிருந்தது. நம் நாட்டுத் துணிகள் பாலாவி போன்று மென்மையும் வெண்மையும் உடையன வாய் இருந்தன என்பதை நம் சங்ககால இலக்கியங்கள் கூறுகின்றன. அம் மெல்லிய ஆடைகள் அந் நாள்களில் வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது வரலாறு கூறும் செய்தி.

'ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்'- அஃதாவது பாலாவியையொத்த நூலாற் செய்த ஆடை — என்று நம் ஆடைகளின் நயத்தைப் பெரும் பாணாற்றுப் படை கூறுகின்றது. 'பாலா ராவிப் பைந்துகில்' என்று சீவகசிந்தாமணியில் காணுகின்றோம். 'புகை விரிந்தன்ன பொங்கு துகில்' என்று புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. பாலின் ஆவிபோன்று மெல்லிய துணிகளை நெய்வது எனில், எவ்வளவு கைவினைத்திறனும் கைத்தொழில் வளமும் அன்று நம் நாட்டில் இருந்திருக்கவேண்டும்?

ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட்டபின் நம் நாட்டின் கைத்தொழில்கள் நலிந்து மறைந்தன. சிறு குண்டூசியில் இருந்து பெரிய இயந்திரங்கள் வரை வெளிநாட்டுப் பொருள்களே இறக்குமதி செய்யப்பட்டன. எழுதும்

பேனு, காகிதம், மை இவைபோன்ற எளியன வும் பயன்தருவனவுமாகிய பொருள்களைக்கூடப் பாரத நாட்டிற் செய்வதற்கான வாய்ப்போ வசதியோ இல்லாமற் போய்விட்டது. அறி வியல் அறிவு போதுமானபடி நம் நாட்டில் பரவ வில்லை. எனவே, புதிய இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதும் அவற்றை இயக்குவதும் நம் நாட்டி னருக்குப் புரியாதனவாய் இருந்தன.

இந்த நிலையைக் கண்ட பாரதியார் கைத் தொழில் முன்னேற்றத்தின் இன்றியமையாமை யினை மக்களுக்கு உணர்த்தினர். கைத்தொழில் முன்னேற்றத்தைப் பற்றிய அவர் பாடல்கள் இன்றைய நிலைக்கும் பொருந்தும் சிறப் புடையன.

'பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவைகொடுப்போம்.

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள்
[வைப்போம்;
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள்
[செய்வோம்.'

நம் நாட்டின் இயற்கை வளத்தினையும் நாம் பெருக்கவேண்டும். நிலத்தின்கீழ்ப் புதைந்து

கிடக்கும் கனிப்பொருள்கள் எத்தனையோ கைத் தொழில்களுக்கு உதவுவன. இவ்வாருன பொருள்களைக் குடைந்தெடுத்துப் பயன்படுத்தியும், அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் வளம் பெறவேண்டும் என்கிருர் கவிஞர் :

'வெட்டுக் கனிகள்செய்து தங்கம் முதலாம்
வேறு பல்பொருளும் குடைந் தெடுப்போம் ;
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு [வருவோம்.'

நாட்டிற்கு முக்கியமாய் வேண்டியது உணவுப் பொருள்கள். பயிர்த்தொழிலின் திறனுலேயே உணவு உற்பத்தி பெருகமுடியும். எனவே, விடுதலையடைந்த பின் நாம் பயிர்த்தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்திவருகிறேம். போதிய நீர் வசதி இல்லாத காரணத்தால்தான் பல இடங்கள் பாழாய்க் கிடக்கின்றன. கட்டாந் தரைப் பகுதிகளை எல்லாம் கழனிப் பகுதிகளாய் மாற்றுவதற்கு இன்று நாம் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதற்குத் தேவையான நீரை எப்படிப் பெறுவது என்பதுபற்றியும் நாம் இன்று சிந்திக்கின்றேம்; அதற்கான திட்டங்களை வகுக்கின்றேம்.

நம் தமிழ்நாட்டிலுள்ள காவிரி நீரனைத்தும் தொழிலுக்கே பயன்படுகிறது. அதன் பெரும் பகுதி வீணுவதில்லை. ஆனுல், என்றும் வற்ருத

கங்கை நதியின் நீர் முழுதுமாகப் பயன்படுத்தப் பெறவில்லை. கங்கையின் பெரும் பகுதி நீர் வீணாகிக் கடலிலேயே சேருகின்றது. ஆதலால், கங்கையையும் காவிரியையும் இணைக்கும் வகையில் பல கால்வாய்களை வெட்டிக் கங்கை யாற்றின் நீரை நாடு முழுவதற்கும் பயன்படு மாறு செய்வதற்கான திட்டங்களை அமைப்பதில் நாம் இன்று முனைந்துள்ளோம். கவி பாரதி யாரோ இத் திட்டத்தை அன்றே கூறியுள்ளார் :

'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்.'

வானொலிபற்றி இன்று நம் எல்லோருக்கும் தெரியும். அறிவு வளர்ச்சிக்கும் கல்வி பரவுவதற் கும் வானொலி பயன்படுவதையும் நாம் காண் கின்றோம். ஆனால், பாரதியார் இதே செய்தியை,

'காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்'

என்று அன்றே பாடியுள்ளார்.

தொழில் நுட்பக்கல்வியும் வானியல்போன்ற அறிவியல் ஞானமும் மக்களுக்குத் தேவை என்று அவர் கூறுகின்றார் :

'மந்திரம்கற் போம்வினைத் தந்திரம் கற்போம் ;
வானையளப் போம்கடல் மீனை யளப்போம்.'

தொழில் நுட்பத்தில்மட்டுமே நாம் அக் கறை காட்டிவிட்டு, கலைகளையும் காவியத்தை யும் மறந்து விடலாகாது என்பது பாரதியாரின்

கருத்து. கலை வளரவேண்டும்; 'அதனோடு கொல்லருலையும் வளரவேண்டும்; ஓவியம் செய்வதோடு நல்ல ஊசிகளையும் செய்தல் வேண்டும் என்கின்றார் அவர்.

'காவியம் செய்வோம் நல்ல காடுவளர்ப் போம்
கலைவளர்ப் போம் கொல்லருலை வளர்ப்போம்
ஓவியம்செய் வோம் நல்ல ஊசிகள் செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.'

இரும்பைக் காய்ச்சி உருக்கும் தொழிலோடு நாம் இயந்திரங்களையும் செய்யவேண்டும். வேர்வை சிந்தி ஆயிரக்கணக்கான தொழில்களைச் செய்வதோடு நின்றுவிடக்கூடாது; பாட்டும் செய்யுளும் இயற்றவேண்டும்; பரத நாட்டியமும் ஆடவேண்டும்; அன்றியும் உலகப் பொருள்களின் தன்மைகளை ஆய்ந்து அறிவியல் நூல்களை நாம் இயற்றல்வேண்டும். இவ்வாறு அவர் நமக்குக் கட்டளை இடுகின்றார் :

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
இயந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
... ... .. ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!'

தொழிலோடு கலையும் வளர்ந்தாலும் நாட்டிலே அறம் நிலவவேண்டும். நாட்டின் நலன்

அனைவருக்கும் பொதுவானது என்னும் நீதி நிலவினால்தான் மக்களிடையே இன்பம் பெருகும். இவ்வாறு நாட்டிலே அறத்தைக் கூட்டி, மக்களுக்கு இன்பத்தை ஊட்டினால், நம் மக்களின் வாழ்வு கண்கண்ட தெய்வ வாழ்வு ஆகிவிடும் என்கிறார் கவிஞர்.

'நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!'

இவ்வாறு கலையும் தொழிலும் கலந்து, அறமும் கல்வியும் நிலைத்து, இன்பம் நிலவும் சமுதாயமாகப் பாரத நாடு விளங்கவேண்டும் என்பதே பாரதியார் கண்ட கனவாகும். இந்தக் கனவு இன்று ஓரளவுதான் நனவாகி உள்ளது.

## 9. திறமான கல்வி முறை

நாம் நிலத்தைக் குடைந்து வைரக் கற்களை எடுக்கின்றோம். அவ்வாறு எடுத்த உடனே அவை ஒளி வீசுவதில்லை. சாதாரணக் கருங்கற்களைப்போன்றே அவை தோற்றமளிக்கின்றன. அவற்றுக்குப் பட்டை தீட்டி மெருகு கொடுத்த பின்புதான் கண்ணைக் கவரும்வண்ணம் ஒளி வீசுகின்றன அக் கற்கள். இதுபோன்றே மக்கள் ஒவ்வொருவரிடமும் அறிவு என்னும் வைரக் கல் புதைந்துகிடக்கின்றது. அதை எடுத்துப் பட்டை தீட்டி மெருகேற்றுவது கல்வியேயாகும். கல்வியினால் மெருகேறிய அறிவு ஒண்மை பெறுகின்றது; ஒளி வீசுகின்றது

'மனிதனிடம் அமைந்திருக்கும் அறிவொளியைத் துலங்கவைத்தலே கல்வியாகும்' என்று விவேகானந்தர் கூறியுள்ளார். இயல்பாகவே மனிதனிடம் முழுமை பெற்றுத் திகழ்கின்ற அறிவாற்றல் கல்வியின் உதவியால் கனிந்து ஒளிருகின்றது. இவ்வாறு உண்மையறிவை ஒளிரச் செய்வதே உயர்ந்த கல்வியாகும்.

இன்று நாம் பள்ளிகளில் எண்ணையும் எழுத்தையும் பயில்கின்றோம்; எத்தனையோ நூல்களைப் படிக்கின்றோம். இதன் பயன் என்ன? இம் முறையால் உண்மையான கல்வியை நாம்

பெறுகின்றோமா? இதனுல் நமது உண்மை யறிவு ஒளிர்கின்றதா? இதுபற்றிக் கவிஞர் பாரதியார் சிந்தித்தார்.

வறுமை மிகுந்த நம் நாட்டில் பள்ளிகளில் படிப்போரில் மிகப் பெரும்பாலோர் வாழ்தொழிலைக் குறிக்கோளாய்க்கொண்டே படிக்கின்றனர். ஆங்கிலேயர் நம்மையாண்டு வந்த நாள்களில் அலுவலக எழுத்தர் வேலையும் அதிலிருந்து உயரும் வேலைகளுமே இந்திய மக்களுக்குக் கிடைத்தன. எனவே, பள்ளிக்கல்வி, சிறுவர்கள் எழுத்தர்களாய்ப் பயிற்சி பெறுவதற்கு ஏற்ற முறையில்தான் அமைந்திருந்தது.

ஆங்கில இலக்கியங்களை மாணவர்கள் படித்தனர். அவற்றை நன்கு கற்றுத் தேர்வுகளில் விடையளித்தனர். ஆனுல், இலக்கியம் படைக்கும் ஆற்றலோ, கவிதை உள்ளமோ அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. ஏதோ அறிவியல் நூல்களைப் பயின்று மாணவர்கள் தேர்ச்சி பெறுவர். ஆனுல், தாமாகச் சிந்தித்து, ஆய்ந்து, புதுப்புனைவுகளைக் கண்டறியும் ஆற்றல் அவர்களிடம் தோன்றவில்லை. இந்த அவலநிலை கண்டு வருந்தினுர் பாரதியார்.

* கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்

வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வாரெட் டுணைப்பயன் கண்டிலார்.'

அன்னியர் வகுத்த கல்வியைக் கற்ற இளைஞர்களுக்குத் தம் தாய்நாட்டின் சிறப்பும், தாய்மொழியின் ஏற்றமும் தெரிவதில்லை. சிலப்பதிகாரமும் திருக்குறளும் அவர்கள் அறியாதன. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிமுறையும் அறநெறியும் அவர்கள் கல்லாதன. அசோக மாமன்னனின் செங்கோல் நயத்தினையும் வீர சிவாஜியின் வெற்றிச் சிறப்பினையும் பற்றி அவர்கள் படிப்பதில்லை. இவ்வாறு தாய்நாட்டின் பெருமையினை அவர்கள் உணராததால் அன்னியரின் ஆட்சியில் நாடு அடைந்திருந்த சிறுமையையும் அவர்கள் உணரவில்லை. இந் நிலையைக் கண்டு தம் உள்ளம் எரிகிறது என்கிறார் கவிஞர்:

'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்
பேர ருட்சுடர் வாள்கொண் டசோகனார்
பிழைப டாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்

'அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!'

இந்த 'மடமைக் கல்வியால் மண்ணும் பயனிலை' என்று ஏங்கிப் பாடுகின்றார் கவிஞர்.

இந்த நிலை இன்று மாறிவிட்டதா? அன்னிய ராட்சி அகன்றுவிட்டது என்பது உண்மைதான். நம் நாடு விடுதலைபெற்று விட்டதும் உண்மை தான். ஆயினும், நாம் இன்னும் அன்னியமொழி மீதும் அன்னிய நாகரிகத்தின்மீதும் கொண்ட அடிமைப்பற்று அகலவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

கல்விமொழி தாய்மொழியாய் இருக்கவேண்டும் என்பது கல்வித்துறை அறிஞர் கண்டறிந்த உண்மை. தாய்ப்பால் உண்ணும் குழந்தை உடலுறுதியோடு வளர்கிறது; புட்டிப் பால் குடிக்கும் குழந்தை உடலுறுதியின்றி நலிகிறது. தாய்மொழியில் கற்பிக்கும் கல்வி அறிவுக்கு உரமளிக்கிறது; பிற மொழியில் கற்பிக்கும் கல்வி அவ்வாறு அளிப்பதில்லை. இஃதறியாமல், நாம் இன்னும் அன்னிய மொழியான

ஆங்கிலமே பயிற்சிமொழியாய் இருக்கவேண்டு மென எண்ணுகின்றோம்.

ஆங்கில மொழியறிவு நமக்கு வேண்டும்; அஃது இன்றியமையாதது. இன்னும் பல அன்னிய மொழிகளையும் நாம் பயிலுதல்வேண்டும். அப்பொழுதுதான் 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை' நாம் கற்பதற்கு இயலும். உலக நாடுகளில் ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டே செல்லும் அறிவியல் அறிவினை நாம் பெற வேண்டுமெனில் அன்னியமொழிப் பயிற்சி மிகவும் தேவையானது என்பதில் ஐயமில்லை. ஆனால், தாய்மொழிப் பயிற்சியைப் புறக்கணித்து விட்டு அன்னியமொழியைப் பயிலுவதால் பயனேதும் இல்லை.

ஞாயிற்றின் ஒளியிலிருந்தும் காற்றிலிருந்தும் பெறும் ஊட்டத்தால்தான் ஆலமரம் ஓங்கிவளர்கிறது. ஆயினும், அம் மரத்தின் வேர்கள் பூமிக்கடியில் ஆழ்ந்து செல்லுகின்றன. வேரற்ற மரம் விரைவிலே பட்டு மடிந்துவிடும். அதுபோல் தான், அன்னியமொழிகள் என்னும் ஒளியும் காற்றும் அறிவு வளர்ச்சிக்கு வேண்டியன; ஆனால், அந்த அறிவென்னும் மரம் தாய்மொழி என்னும் தரையிலே ஆழமாய் வேரூன்றி இருத்தல் வேண்டும். இல்லையேல், நம் அறிவும் நாகரிகமும் ஓங்கி வளரும் மரம்போல் ஆகாமல், ஓசிந்து படரும் பாசிபோல் ஆகிவிடும்.

எனவேதான், பாரதியார் நம் நாட்டின் பழம்பெருமையை நாம் மறவாது, வழிவழி வந்த நாகரிகத்தைப் பேணி வாழவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார். இளஞ்சிறார் நெஞ்சிலே பதியும்படி 'புதிய ஆத்திசூடி' ஒன்று அவர் பாடியுள்ளார் :

'அச்சம் தவிர்.
ஆண்மை தவறேல்.
உடலினை உறுதிசெய்.
எண்ணுவது உயர்வு.
ஏறுபோல் நட.
கீழோர்க்கு அஞ்சேல்.
குன்றென நிமிர்ந்துநில்.
கூடித் தொழில்செய்.
சிதையா நெஞ்சுகொள்.
தன்மை இழவேல்.
தாழ்ந்து நடவேல்.
தீயோர்க்கு அஞ்சேல்.
துன்பம் மறந்திடு.
தொன்மைக்கு அஞ்சேல்.
நன்று கருது.
நாளெல்லாம் வினைசெய்.
நீதிநூல் பயில்.
பணத்தினைப் பெருக்கு.
பாட்டினில் அன்புசெய்.
புதியன விரும்பு.
பொய்ம்மை இகழ்.
போர்த்தொழில் பழகு.
மானம் போற்று.'

'தொன்மைக்கு அஞ்சேல்' என்றும் 'புதியன விரும்பு' என்றும் கூறிப் புதிய வாழ்வை வகுக்கும் வழிகளை உணர்த்துகின்றார் பாரதியார். நம் அறிவை வளர்க்க உதவாத கல்வி முறையை அவர் கடுமையாய்த் தாக்குகின்றார்.

நரிபோல் தந்திரமாய் வாழும் சேவகர்கள், உணவே பெரிதென்று தன்மானத்தை விற்கும் பேடியர்கள், இச்சகம் பேசுவோர் இவர்கள் போன்ற மாக்கள் பயிலும் கலை என்று இக் காலக் கல்வியை இகழ்கின்றார் பாரதியார்.

'நரியு யிர்ச்சிறு சேவகர், தாதர்கள்,
நாயெ னத்திரி யொற்றர், உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலை ... ... ... ... ... ... ... ...'

விடுதலை பெற்ற நம் நாட்டின் கல்வி முறையால் நம் அறிவு ஒளி வீசவேண்டும். சிந்தனைத் திறனும் செயலாற்றலும் வளரவேண்டும். ஒழுக்கத்தில் நாம் உயரவேண்டும். இவையே சிறந்த கல்வி முறையின் சீரிய குறிக்கோள்கள் எனப் பாரதியார் அறிவுறுத்துகின்றார்.

# 10. விடுதலை வேட்கை

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் தடையில்லா நிலையையே விரும்புகின்றன. வானத்திலே பறக்கும் பறவையைப் பிடித்துக் கூட்டிலே அடைத்துவிடில் அஃது என்ன பாடு படுகிறது! பாலும் சோறும் பழங்களும் கொடுத்துப் பச்சைக்கிளியைத் தங்கக்கூண்டிலே அடைத்து வளர்த்தாலும் அது எத்தகைய வேதனை அடைகின்றது! கூண்டின் கம்பிகளைக் கொத்திக்கொண்டேதான் இருக்கின்றது அந்தக் கிளி. ஆற்றிலே நீந்தும் அழகான மீன்களை வீட்டிலேயுள்ள கண்ணாடித் தொட்டியிலே போட்டு வைத்திருக்கும்பொழுது அவை அத் தொட்டியின் புறங்களில் மோதிக்கொண்டே இருக்கின்றன. இவ்வாறு, உயிரினம் எதுவுமே தடையை விரும்புவதில்லை. தடையற்ற நிலையில்தான் அவை இயல்பாய் வாழ்கின்றன; இன்பம் பெறுகின்றன.

உயிரற்ற இயற்கைப் பொருள்களும் தடையைத் தவிர்க்கின்றன. அணைக்கட்டிலே தேங்கி நிற்கும் நீரைத் திறந்துவிட்டவுடன் அஃது எத்துணை வேகத்தில் பாய்ந்து ஓடுகிறது! வீசும் தென்றலில் விரவி வருவது இயல்பான இயக்கத்தின் இன்பம். ஓடும் நீரில் எழுவது நீரின் இயல்

பான ஓட்டத்தில் எழும் இன்ப ஒலி. இவ்வாறு தடையற்ற இயக்கமே இயற்கைப் பொருள்களின் இயல்பு ஆகின்றது.

உயிரற்ற பொருள்களும் ஏனைய உயிரினங்களும் தடை நீங்கிய தன்னியல்பினை நாடும் பொழுது, மனிதன் எவ்வாறு தடைகளைச் சகிக்க முடியும்? தடையற்ற நிலையையே மனித உள்ளம் எப்பொழுதும் நாடுகின்றது. நம் உடலோடு சேர்ந்து வாழும் உயிர் தனது இயல்பான இயக்கத்திற்குத் தடை ஏற்படும்பொழுது, அத் தடையைத் தகர்த்தெறிவதற்கென இடையீடின்றிப் போரிடுகின்றது. தடையற்ற நிலையை விடுதலை அல்லது சுதந்திரம் என்கிறோம். இந்த விடுதலை இல்லாத வாழ்வினை உண்மையில் வாழ்வாக மனிதன் மதிப்பதில்லை. தடையைத் தகர்த்து விடுதலை பெறவேண்டும் என்னும் வேட்கை மனிதனுக்கு இயல்பாய் உள்ளது. இதையே விடுதலை வேட்கை என்று கூறுகிறோம்.

இத்தகைய விடுதலை வேட்கைப் பாடல்களை உணர்ச்சியோடு பாரதியார் பாடியுள்ளார். அன்னியர் ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்ற பாங்கிலே பாடல்கள் அமைந்திருந்தாலும் அவை மனித உள்ளத்தின் இயல்பான விடுதலை வேட்கையையே எடுத்து இயம்புகின்றன.

'இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்' என்கிறார் கவிஞர்.

தனது சுதந்திரத்தை இழந்து மனிதன் இன்பமாக வாழநினைப்பது, தன் கண்களிரண் டையும் விற்று அந்த விலையைக் கொடுத்துச் சித்திரம் வுாங்கும் செயலாகும் என்கிறார்.

'மண்ணினின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்
கைகொட்டிச் சிரியாரோ?'

கண்ணிழந்த குருடனால் சித்திரத்தின் அழகைக் காணமுடியாது. அதுபோல் சுதந்திரம் இல்லாத மனிதனால் வாழ்வில் இன்பம் பெற முடியாது. சுதந்திரத்தைவிட்டு இன்பத்தை நாடுவது கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதாகும்.

சுதந்திரத்தை ஒரு தெய்வமாகக் காண்கின்றார் கவிஞர். சுதந்திர தேவியின் அருளைப் பெருதவர்கள் கல்வியும் செல்வமும் பெற்றிருந்தாலும், உயர்வும் பெருமையும் அடைந்திருந்தாலும், அவர்கள் அழகான அணிகளைப் பூண்ட பிணங்களே என்கின்றார் கவிஞர்.

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்

பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.'

சுதந்திர தாகம் இன்றி அடிமை வாழ்விலே ஆசை கொண்டு வாழ்ந்திருப்போரைக் கண்டு பாரதியார்,

'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்?'

என்று பாடுகின்ருர்.

நாட்டுக்கு விடுதலை கிடைத்து, விடுதலை உணர்வு அனைவரின் உள்ளத்திலும் உறையும் பொழுதுதான், 'எல்லோரும் ஒன்றென்னும் காலம் வரும், ஏமாற்றுத் தொலைகின்ற காலம் வரும், நல்லோர் பெரியரென்னும் காலம் வரும், நயவஞ்சக்காரருக்கு நாசம் வரும்' என்கிருர் கவிஞர். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்து, விழலுக்கு நீர் பாய்ச்சி மாயாமல், வெறும் வீணருக்கு உழைத்து உடல் ஓயாமல் வாழும் முறையை விடுதலைபெற்ற சிந்தனை உடையோரால்தான் எய்தமுடியும் என்று அவர் கூறுகின்ருர்.

விடுதலையுணர்வு வரவேண்டுமெனில், அச்சம் நீங்கவேண்டும்; ஆண்மை தாங்க வேண்டும்; பிச்சை வாங்கிப் பிழைத்து உயிர் பேணல் ஒழிய

வேண்டும்; மேலும், நாம் சேர்ந்து வாழ வேண்டும்; நம் சிறுமை அகலவேண்டும்.

நெஞ்சில் உரம் இன்றி, நேர்மைத்திறம் இன்றி, வஞ்சனை சொல்வார்க்கும் வாய்ச்சொல் வீரர்க்கும் விடுதலை உணர்வு இருப்பதில்லை. அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உள்ளத்திற்கொண்டு உழலும் மக்களுக்கு விடுதலை ஏது? ஊக்கமும் உள்வலியும் இல்லாமல் உண்மையில் பற்றும் கொள்ளாமல், மானம் சிறிதெனக் கருதி வாழ்வே பெரிதென்றெண்ணும் ஈனர்களுக்கு ஏது விடுதலை என்று கேட்கின்றார் பாரதி.

அரசியலில் தளையாக இருந்த அன்னியர் ஆட்சி அகன்று நாம் விடுதலை பெற்றுள்ளோம். ஆயினும், நாம் இன்னும் எத்தனையோ தளைகளால் கட்டுண்டு இருக்கின்றோம். அறிவுக்கு ஒவ்வாத சாத்திரங்களும் சடங்குகளும், கொள்கைகளும் கோட்பாடுகளும் நம் வாழ்வுக்குத் தளைகளாகவே உள்ளன. சாதிப் பிரிவுகள், சமயப்பிணக்குகள், மூடக்கொள்கைகள்போன்ற தளைகள் இன்னும் இருக்கின்றன. இவற்றிலிருந்தும் விடுதலை பெற்றால்தான் நாம் உண்மையான விடுதலை பெற்ற உயர்ந்த நாட்டினர் ஆவோம். ஆதலால்தான், 'கட்டென்பதனை வெட்டென்போம்' என்று நம்மைத் தட்டி எழுப்புகிறது கவிஞரின் குரல்.

## 11. அன்புடைமையும் அச்சமின்மையும்

அச்சவுணர்வு நம் எல்லோருக்கும் இயல்பாகவே இருக்கின்றது. நமக்கு வறுமை வந்து விடுமோ என்று அச்சம்; எண்ணியது நிறைவேருதோ என்று அச்சம். இவ்வாறு வாழ்விலே பலப்பல அச்சங்கள் எழுகின்றன. இந்த அச்சத்தின் காரணமாகத்தான் கவலைகள் நமக்குத் தோன்றுகின்றன.

'அச்சந் தவிர்' என்கிருர் பாரதி; வானமே இடிந்து உச்சிமீது விழுந்தாலும் நாம் அச்சங் கொள்ளலாகாது என்று பாடுகின்ருர்:

'உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை. அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

மக்கள் அச்சம் இன்றி வாழ்வது அரியதொரு பேருகும். அச்சவுணர்வாலேயே அளவற்ற அல்லல்கள் நம் வாழ்வில் வருகின்றன. மனிதனை மனிதன் கண்டு அஞ்சியதாலேயே எத்தனையோ போர்களும் அழிவுகளும் ஏற்பட்டன என்பதை உலக வரலாறு உணர்த்துகிறது.

'யார்க்கும் அஞ்சோம்; எதற்கும் அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம்; எப்பொழுதும் அஞ்சோம்'

என்று சூளுரை எடுக்கின்ருர் கவிஞர்.

அச்சத்தை நம் உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டுமெனில் அன்புணர்வு நம் மனத்தில் நன்கு நிலைபெறவேண்டும். நாம் எவர்மீது அன்பு கொண்டிருக்கின்றோமோ அவரைப்பற்றி நாம் அச்சங்கொள்ளுவதில்லை. அன்பு உள்ள இடத்தில் அச்சத்திற்கு இடமில்லை. கவலை, சோர்வு, அச்சம் எல்லாம் அன்புணர்வால் அகற்றப்படுகின்றன. அன்புணர்வு என்றும் அழியாது உள்ளது.

' துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமும் எல்லாம்
அன்பில் அழியுமடி — கிளியே!
அன்புக்கழிவில்லை காண்.'

துன்ப நினைவுகளும் சோர்வும் பயமும் போய்விட்டால் இன்பநிலை நமக்கு எய்திவிடுகிறது. நாம் எய்த விரும்புவதை எல்லாம் அன்பின் வழியே எய்தலாம். எனவே, அன்பைவிடச் சிறந்த தவம் இல்லை. அந்த அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு என்கிறார் கவிஞர் :

செய்கதவம் செய்கதவம் நெஞ்சே தவம்செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம்—வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.'

உலக மக்கள் அனைவோர்மீதும் நாம் அன்பு செலுத்தினால் பிரிவுகள் போகின்றன. ஆகவே, துன்பங்கள் போகின்றன. பிரிவுகள் போவதால்

யாவரும் ஒன்ருக ஆகின்றனர். எனவே, இன்பங்கள் பெருகுகின்றன. இவ்வாறு அன்பினுல் துன்பங்கள் மறைகின்றன: இன்பங்கள் பெருகுகின்றன.

'அன்பென்று கொட்டு முரசே! — அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும் — வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனுல்

அன்பென்று கொட்டு முரசே! — மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

அன்புதான் மக்களைப் பிரிக்கும் உணர்வினைப் போக்கி அவர்களை இணைக்கின்றது. அந்த இணைப்பிலே இன்பம் பிறக்கின்றது. எனவே,

'பயிலு நல்லன்பை இயல்பெனக்
கொள்ளுதிர் பாரிலுள்ளீர்!'
என்று அவர் பாடுகிருர்.

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்ருர் எய்துஞ் சிறப்பு: (குறள் 75.)

மக்கள் அன்புடையோராய்ப் பொருந்தி வாழ்வதன் பயனுல்தான் இன்புற்றுச் சிறப்பெய்துகின்றனர் என்பது குறள் நெறி.

'இவ்வுலகின் மாந்தரெல்லாம் உடன்பிறந் தார் போன்றோர். பரந்த இந்த உலகில் ஒற்றுமையாக வாழ்வதற்கு இடமா இல்லை? பின் ஏதற்குச் சண்டைகள் வேண்டும்? வயிற்றுக்குச் சோறுண்டு வையத்து மக்களுக்கு; பின் ஏன் உழைத்து உழுது உண்ணுமல் பிறர் உரிமை யைப் பறிக்கவேண்டும்? தம்பி சற்றே மெலி வாஞல், அவனை அண்ணன் அடிமை கொள்வ தில்லை; அதுபோல், திடங்கொண்டோர் மெலிந் தோரைத் தின்று பிழைத்திடல் கூடாது.' இவ் வாறு கூறுகின்ருர் பாரதியார். அன்பு என்னும் பண்பு மக்களிடம் பெருகி விட்டால், சண்டை களும், பிறர் உரிமையைப் பறித்தலும், பிறரைச் சுரண்டி வாழ்தலும் மறைந்துவிடும் என்பது கவிஞரின் கருத்து.

அன்பிலே ஒன்றி ஒற்றுமையுடன் வாழ்வதே நானில மாந்தருக்கு நல்லதொரு பண்பாகும் என்று பகருகிறது அவர் பாடல்.

'ஒன்றென்று கொட்டு முரசே! — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.'

## 12. வாழும் முறைமை

'நாடு உனக்கு என்ன நன்மை செய்கிறது என்று கேட்பதை விட, நாட்டிற்கு நீ என்ன நன்மை செய்யப் போகின்ருய் என்று சிந்திப்பதே சிறந்தது' என்று அமெரிக்க நாட்டுத் தலைவராய்ப் புகழுடன் விளங்கிய ஜான் கென்னடி என்பார் தம் நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறினுர். இந்த அறிவுரை பொருள் பொதிந்தது. நம் அறிவுக் கண்களைத் திறக்கவல்லது. தன்னலம் ஒன்றையே கருதி வாழும் நம் ஒடுங்கிய உள்ளத்தில் ஒளிவிளக்கை ஏற்றுவது இந்த அறிவுரை.

நாம் உண்ணும் உணவையும் உடுக்கும் உடையையும் கொடுப்பது நம் நாடு. நாம் ஒவ்வொருவரும், உண்ணும் உணவுக்கான நெல்லையும் பிற தானிய வகைகளையும் காய்கனிகளையும் நாமே விளைவிப்பதில்லை. பிறர் சாகுபடி செய்த உணவுப் பொருள்கள், பிறர் நெய்த துணி, இவ்வாறு பிறர் உழைப்பால் கிடைத்த எத்தனையோ பொருள்கள் நம் வாழ்க்கைக்குப் பயன்படுகின்றன. இவற்றை நாம் விலை கொடுத்து வாங்கியிருக்கலாம். ஆயினும், இவையனைத்தும் மற்றவர்களின் உழைப்பால் கிடைத்தவை என்பதை நாம் மறப்பதற்கில்லை.

நாட்டில் நமக்கு அறிமுகமாகாத எத்தனையோ மனிதர் தம் வியர்வையைச் சிந்தி உழைத்து,

அதனல் பெற்ற பயனையே நாம் நுகர்ந்து மகிழ்கின்ரேம். அப் பயன்தரும் பொருள்கள் இல்லையெனில் நாம் உயிர்வாழ்தல் இயலாத தாகிறது. எனவே, நாம் இனிது வாழ்வதற்குப் பிற மக்களின் உழைப்பும் உதவியும் இன்றியமை யாதன ஆகின்றன. இவ்வாறு, நமக்கு உதவு வோர்க்கு 'நாம் என்ன கைம்மாறு செய்யப் போகின்ரேம்? இந்த எண்ணம் நம் ஒவ்வொரு வர் உள்ளத்திலும் உதித்தால்தான் 'நம் நாட் டிற்கு நாம் என்ன பணிசெய்யப் போகின்ரேம்?' என்னும் சிந்தனை எழும்.

நாம் வாழும் உலகந்தான் எவ்வளவு அழ குடையது? எவ்வளவு இன்பத்தை அது நமக்கு நல்குகிறது? உலகத்து இயற்கையில் உறை யும் இன்பத்தைக் கவிஞரின் உள்ளம் கண்டு களிக்கின்றது.

மாலை நேரம்! மேற்கே அடிவானத்தில் பரிதிக் கோளம் அளப்பரிய விரைவினெடு சுழலு கின்றது. இடிவானத்து ஒளிமின்னல் பத்துக் கோடி எடுத்து ஒன்றுபட உருக்கி வார்த்து எடுத்த வட்டத்தை இயற்கை சுற்றுவதன் அழகு தான் என்ன! இச் சுடர்ப் பரிதியைச் சூழ்ந்து படர்ந்துள்ள முகில் கூட்டங்கள் தீப்பட்டாற் போன்று எரிகின்றனவே! எரிந்திடும் தங்கத் தீவு களாகப் பலப்பல வண்ணங்களிலும் வடிவங்களி லும் முகில் கூட்டங்கள் திகழ்கின்றனவே! நீல

நிற வானப் பொய்கையில் மிதந்திடும் தங்கத் தோணிகள்போல் மேகங்கள் மிதக்கின்றன; வானத்தின் புதுமை கணந்தோறும் மாறுகின்றது; உவகையுறப் புதிதுபுதிதாய்த் தோன்றுகின்றது. இந்த அழகுக் காட்சியை இயற்கை அன்னை எழுதும் கவிதை என்கின்றார் பாரதி:

'கணந்தோறும் வியப்புகள் புதிய தோன்றும்
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ?'

என்று இயற்கையின் அழகைக் கண்டதால் எழும் அளவில்லா வியப்பினைக் கூறுகின்றார் கவிஞர்.

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா !
... ... ... ... ... ... ... ... ...
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்'

என்று இயற்கை இன்பத்திலே திளைக்கும் கவிதையுள்ளம் கூறுகின்றது.

இவ்வளவு இயற்கை இன்பத்தையும் வாழ்க்கை நலன்களையும் பெறும் நாம் உலகுக்கு என்ன செய்யப்போகின்றோம்? இந்த வினா பாரதியின் மனத்திலே எழுகின்றது.

இவ்வுலகத்தில் எத்தனையோ மக்கள் பிறந்து வாழ்ந்து மறைகின்றனர். ஏதோ பொருளீட்டி, உண்டு மகிழ்ந்து, சிறு கதைகளைப் பேசிப் பிறர் வருந்தும்படி தீங்குகள் செய்து, நாளடைவில்

கிழப்பருவம் எய்தி, முடிவில் மாண்டு மறையும் வேடிக்கை மனிதரைப்போல் நானும் மாய்ந்து மறைய வேண்டுமா ? என்று கேட்கிறார் கவிஞர் :

'தேடிச் சோறுநிதந் தின்று — பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்
வாடித் துன்பமிக உழன்று — பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி — கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் — பல
வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ ?'

உண்டு மகிழ்ந்து பின் மறையும் மனிதர்களை, உலகுக்கு வேறு வகையில் பயனற்ற மனிதர்களை, 'வேடிக்கை மனிதர்கள்' என்று இழிவாகக் குறிப்பிடுகின்றார் கவிஞர்.

தமக்கு இன்னின்ன வேண்டுமென்று இறைவனிடம் அவர் வரம் கேட்கின்றார் :

வலிவுடைய தோளும், சோர்வும் பிணியும் இல்லாத உடலும், வாள் கொண்டு பிளந்தாலும் கட்டுக் குலையாத உடலுறுதியும், ஒளிதிகழும் முகமும், பாடும் திறனும் வேண்டும் என்கிறார் அவர்.

' கூடுந் திரவியத்தின் குவைகள் — திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் — [இவை
நாடும் படிக்குவினை செய்து — இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் — கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்'

என்று காளி தேவியிடம் அவர் வரங் கேட்கின்றார்.

விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடலும், நசையறு மனமும், நித்தம் நவமெனச் சுடர்தரும் உயிரும் கேட்கின்றார் பாரதியார்; 'திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்' என்கிறார்; 'மனத்தினில் உறுதியும், வாக்கினில் இனிமையும், பொருளும் இன்பமும் புவியில் பெருமையும் வேண்டு'மென்கின்றார்; 'தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல் வேண்டும்' என்கின்றார்.

... ... ... ... ... ... ... — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்'

என்று அவர் கேட்ட வரத்தை உண்மையிலேயே பெற்றுவிட்டார். இன்றும் இவ் வையத்தைப் பாலித்திடும் திறம் அவர் பாடல்களுக்கு இருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

நாம் எல்லோருமே நம்பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட முடியாதுதான். இளங்கோபோன்ற இன்கவியாய், வள்ளுவர் போன்ற வழிகாட்டியாய் நாம் ஆகி விடுவது இயலாதுதான். நாம் ஒவ்வொருவருமே உலகப் புகழ் எய்திடல் இயலாது. எனினும், நாடு புகழ

நாம் வாழலாம். இல்லையேல், ஊர் புகழ நாம் வாழலாம். அதுவும் இல்லையேல், உற்ருர் புகழ வாவது நாம் வாழவேண்டும். இல்லாவிடில், ஏதோ பிறந்து மடியும் மானிடப் பூச்சிகளாய் நாம் ஆகிவிடுவோம்.

நாம் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் நம் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள்ளன. அக் கடமைகளை ஆற்று வதில் நாம் சோர்வடையலாகாது. அவற்றை ஊக்கத்துடனும் உள்வலியுடனும் ஆற்ற வேண்டும். கடமை என்று எடுத்துக்கொண்டால் அதில் ஏற்றத்தாழ்வு ஏதுமில்லை. கடமை ஆற் றும் பாங்கினில் ஒருவரைவிட ஒருவர் உயர்ந்த வரில்லை; தாழ்ந்தவரில்லை. கடமையைச் செவ் வனே செய்பவர் உயர்ந்தோர்; அதைச் செய்யா தவரே தாழ்ந்தோர்.

வையகம் காத்து நிற்போரும் வாழைப் பழத்தை விற்போரும் தொழில் செய்து வாழ்வ தால் மேலோரே; தொழில் செய்யாதோரே கீழோர் என்கிருர் பாரதியார் :

'வையகம் காப்ப வரேனும் — சிறு
வாழைப் பழக்கடை வைப்ப வரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே — பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.'

நமக்குற்ற கடமைகளைச் செய்கின்ருேம். ஆனல், அதில் நாம் எதிர்பார்த்த பலன் எப் பொழுதும் கிட்டுவதில்லை. உடனே நாம் மனந்

தளர்கின்றோம். பின்பு, கடமை தவறுகின்றோம். இது கூடாது என்கிறார் பாரதியார். 'கடமை செய்; அறம் பொருந்திய கடமைகளை நீ செய்து கொண்டே இரு. அதனால் விளையும் பயனைக் கருதாதே!' என்கிறார் கவிஞர் :

'செய்தலுன் கடனே — அறஞ்
செய்தலுன் கடனே — அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே.'

நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் பதற்றமோ மிதமிஞ்சிய விரைவோ கூடாது. பூமியில் ஊன்றிய விதை எவ்வாறு ஆரவார மின்றி முளைக்கின்றதோ அவ்வாறு நாமும் பதறாமல் பொறுமையுடன் காரியங்களைச் செய்து பயனடைதல் வேண்டும் என்கிறார் கவிஞர் :

'பக்தியுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்.'

உலகில் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. நாம் தீமையான செயல்களைச் செய்தல் கூடாது என்று நீதி நூல்கள் கூறுகின்றன. தீமையைச் செய்யாமல் நாம் இருந்தால் மட்டும் போதுமா? நம்மில் பலர் தீமைகளை இழைப்பதில்லை. ஆனால், மற்றொருவர் தீமைகளைச் செய்வதை நாம் பார்த்துக்கொண்டு வாளாவிருந்து விடுகின்றோம். அதைப்பற்றி நமக்கென்ன என்னும் எண்ணத்தில் அத் தீமையைத் தடுப்பதற்

கென நாம் முயலுவதில்லை. இத்தகைய மனப் போக்கு நல்வாழ்வுக்கு உகந்ததா? இல்லை.

தீமையையோ அநீதியையோ இழைப்பது எவ்வளவு தவருன செயலோ அவ்வளவு தவருனது அவை இழைக்கப்படுவதைக் கண்டும் நாம் வாளாவிருப்பது. உண்மையிலேயே, தீமை செய்வோரும் அநீதி செய்வோரும் தங்களைப் பிறர் தடுப்பதில்லை என்னும் மனவுறுதியினுலேயே அச் செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே, அவற்றைத் தடுக்காமல் இருக்கும் நாம் அவை இழைக்கப்படுவதற்கு ஊக்கமளித்து உதவி புரிந்தவர்களாகிவிடுகின்ருேம். எனவே,

'பாதகஞ் செய்பவரைக் கண்டால் — நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்து விடு பாப்பா! — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!'

என்று அழுத்தமாக நமக்கு அறிவுறுத்துகின்ருர் கவிஞர்.

வாழ்வில் எத்தனையோ காரியங்கள் குறித்து நாம் கவலைப்படுகின்ருேம். கவலை நம் உள்ளத்தை அரித்துவிடுகின்றது; உள்ளத்தின் உரத்தைக் குறைத்து விடுகின்றது. கவலைகளுக்கான காரணத்தை அகற்ற முனைவதே கவலையைப் போக்கும் வழியாகும். கவலையிலேயே தோய்ந்திருப்பதால் பயனேதும் விளைவதில்லை. அஃது அறியாமையே யாகும்.

'நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி,
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை ......'

என்கின்றார் கவிஞர்.

'ஒன்றை விட்டு மற்றோர் — துயரில்
உழலும் நெஞ்சம் வேண்டா.'

என்றும் அவர் கூறுகின்றார்.

'கவலைப் படுதலே கடுநரகு.'

என்று கவலையின் கொடுமையையும் எடுத்துக் காட்டுகின்றார்.

கடந்துபோன பல காரியங்கள் குறித்தும் நாம் கவலைப்படுகின்றோம். கடந்து போனதை நாம் இன்று மாற்ற இயலாது; நடந்தது நடந்ததுதான்; நாம் படும் கவலையால் அது மாறப் போவது இல்லை. எனினும், சென்றதுபற்றியே சிந்தை செய்து கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமைகின்றோம் நாம். அவ்வாறு செய்தல் வேண்டா என்கின்றார் பாரதியார்; ஒவ்வொரு நாளும், இன்று புதிதாகப் பிறந்துள்ளோம் என்னும் எண்ணத்துடன் இன்புற்று வாழவேண்டும். தீமைகளெல்லாம் திரும்பி வாராமல் அழிந்துவிடும் என்கின்றார் :

'சென்றதினி மீளாது, மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டா

இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்
[கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா.'

பொதுவாக, நாம் புதியதை விரும்புகின்றேம். ஆனலும், அதை ஏற்பதற்கு அஞ்சுகின்றேம். மீண்டும் பழையதையே நாடுகின்றேம். பழைய வழக்கங்கள் நல்லவையல்ல என்று நாம் தெரிந்து கொண்டாலுங்கூட; அவற்றை விடுவதென்றல், ஏதாவது கேடு வந்து விடுமோ என்னும் அச்சம் நமக்கு வருகிறது. புதியதாக ஒன்றை ஏற்றுக்கொண்டால் அதனல் இடர்கள் வருமோ என்னும் அச்சமும் வருகிறது. மதுவில் விழும் வண்டுபோல், மீண்டும் பழைய வழக்கங்களுக்கு நாம் அடிமையாகி விடுகின்றேம். இதனல், வாழ்வின் வளர்ச்சி தடைப்படுகிறது; முன்னேற்றம் இயலாததாகின்றது. எனவே, பாரதியார் தம் மனத்திற்குக் கட்டளை இடுவதுபோல் பாடுகின்றர்:

'புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்;
அடிக்கடி மதுவினை அணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணேமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததில் இசைவாய்..

பழமை பழமை என்று பழமை ஒன்றையே நாடுதல் பிணம் நாடும் காகத்தின் செயலைப் போன்றது என்கிறார் புதுமைக் கவிஞர்.

பழமை எல்லாம் நல்லதும் இல்லை; புதுமை எல்லாம் தீயதும் இல்லை. பழமையில் நல்லதும் உண்டு தீயதும் உண்டு. அதுபோல் புதுமையிலும் நல்லதும் தீயதும் உண்டு. எனவே, நலந்தரும் பழமையை நாம் பேணுவோம். நன்மையான புதுமையையும் நாம் ஏற்றுக்கொள்வோம். அதனால்தான் 'புதியதைக் கண்டு அஞ்ச வேண்டா; பழமையில் மயங்கி வீழவும் வேண்டா,' என்கின்றார் பாரதியார்.

எனவே, 'வேடிக்கை மனிதரை'ப் போல் நாம் வாழாமல், உயர்ந்த குறிக்கோளுடன், அச்சமும் கவலையும் நீக்கி, அன்புடன் பொருந்தி, திண்ணிய நெஞ்சமும் தெளிந்த நல்லறிவுங் கொண்டு, மனத்தினில் உறுதியும் வாக்கினில் இனிமையும் பெற்று, பயன் கருதாது கடமையாற்றிப் பாதகஞ் செய்வோரைக் கண்டு பயப்படாமல், பழமையையும் புதுமையையும் பாங்குடன் ஏற்று, வயிரமுடைய நெஞ்சோடு நாம் வாழும் முறையை அமைத்தல் வேண்டும்.

'வயிர முடைய நெஞ்சு வேணும்; — இது
வாழும் முறைமையடி பாப்பா!'

## 13. காந்தி நெறி

ஒருவர் மற்றொருவரின் உடலை வருத்தி வெற்றி கொள்வதென்பது ஒன்று; உள்ளத்தைத் திருத்தி வெற்றியடைவது என்பது மற்றொன்று. உடலை வருத்துவது வன்முறை; உள்ளத்தைத் திருத்துவது இன்முறை. உடலை வருத்துவதற்குக் கொடிய படைக்கலன்களும் கருவிகளும் வேண்டும்; உள்ளத்தைத் திருத்துவதற்கு அத்தகைய கருவிகள் வேண்டா.

ஆங்கிலேயர் நம்மை அடக்கி ஆண்ட பொழுது, அவர்கள் படைவலியே அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. காவற்படையினரின் தடிகளும், துப்பாக்கிகளும், இராணுவமும் மக்களை அடங்கியிருக்கச் செய்தன. நம் நாட்டு விடுதலையை நாடி உழைத்தவருள் சிலர் ஆங்கிலேயரை வன்முறையால் எதிர்த்தே தம் குறிக்கோளை அடைய முடியும் என்று கருதினர். மறைவாக வெடிகுண்டுகள், ஆயுதங்கள் இவற்றை உற்பத்தி செய்து அயல் ஆட்சியாளரைத் தாக்குவது, அடக்குமுறை செய்யும் காவற்பணியாளரைத் தாக்குவது என்னும் வன்முறையைக் கையாள முற்பட்டனர். இதுவே அரசியல் முறை என்று கருதப்பட்டது.

நம் 'நாட்டின் தந்தை' என்று நாம் போற்றும் காந்தியடிகள் அரசியலில் தலைமையேற்ற பின் நிலைமை மாறியது. எந்தச் சூழ்நிலையிலும் வன்

முறை கூடாது; இன்முறையே ஏற்றது என்னும் நெறியை நாட்டு மக்களுக்கு அவர் புகட்டினர்.

'நாம் இன்னொருவரது உடலை எவ்வளவு துன்புறுத்தினலும் அதனல் அவரது மனம் மாறுவதில்லை. மனம் மாறினல்தான் அது உண்மையான மாற்றமாகும். எனவே, ஒருவரது உடலை வருத்தியதால், அவரது கருத்தை மாற்றிவிட்டோம் என்று நினைப்பது தவறேயாகும். இந்திய நாட்டைப் படைவலியால் அடக்கியாளும் ஆங்கிலேயரை அச்சுறுத்தி அவர்தம் மனத்தை மாற்ற முடியாது. அவர்களுட் சிலரைக் கொன்றதாலோ கொடுமைப்படுத்தியதாலோ அவர்கள் மனம் மாறப்போவதில்லை. பிற நாட்டினரைப் படைவலியால் அடக்கி ஆள்வது முறையன்று என்பதை அவர்களே உணர வேண்டும். இதை அவர்கள் உணருமாறு நாம் செய்தல் வேண்டும். இதற்கு வழி என்ன?

ஆங்கிலேய ஆட்சியாளர் தம்முடைய படை வலிமையையே நம்பியிருக்கின்றனர்; அந்த வலிமையைக் கண்டு நாம் அஞ்சி விடுவோம், அடங்கிவிடுவோம் என்று எண்ணுகின்றனர். இதனல் நாம் அஞ்சவில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். அவர்கள் கையாளும் வன்முறையால் நம்மைப் பணிய வைக்க முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும். நாமும் அதே வன்முறையைக் கையாண்டால் நாம் வன்முறைக்குப் பணிகின்றோம் என்பதே பொருளாகும். அவர்கள் இழைக்கும்

துன்பத்தை ஏற்றுக்கொண்டு, ஆனால் எதிர்த்து எத்துன்பமும் அவர்களுக்குச் செய்யாமலிருத்தல் வேண்டும். அதே நேரத்தில் அயலார் ஆட்சியொடு நாம் ஒத்துழையாமலும் இருந்தால், வன்முறைக்கு நாம் அஞ்சவில்லை என்பதை அவர்கள் உணருவார்கள். வன்முறைக்கு வலிமையில்லை என்பதை உணர்ந்ததும் அவர்களெல்லாம் மனம் மாறியே தீரவேண்டும். இவ்வாறு ஆங்கிலேயரின் மனத்தை நாம் மாற்ற வேண்டும்,' என்று காந்தியடிகள் கூறினர்.

'அயலவர் நம்மை அடக்கி ஆள்வது ஒரு தீமையான செயலே. இத் தீமையை நாம் வெறுக்கின்றோம். ஆனால், தீமையை இழைக்கும் ஆங்கிலேயரை வெறுத்தல் கூடாது. தீமை வேறு; தீமையை இழைப்போர் வேறு. தீமை கொடியது; ஆனால், தீமை இழைப்போர் அறியாமல் அதைச் செய்வர். தீமையை நாம் அழிக்க வேண்டும்; ஆனால், தீமை செய்வோரை அழிப்பதால், தீமை அழிந்து போவதில்லை. பின், எவ்வாறு தீமையை அழிப்பது? தீமை புரிவோரின் மனத்தை நாம் மாற்றவேண்டும். அவர்கள் மனத்தை மாற்றும் முயற்சியில் நாம் வெற்றி பெறுவோமானல், தீமை தானகவே அழிந்து போகிறது. அது மட்டுமன்று. தீமையை இழைத்துக்கொண்டிருந்தோர் மனம் மாறுவதால், அவர்களும் நம்மோடு சேர்ந்து அத் தீமையை அகற்றுகின்றனர். இதுவே, தீமையை ஒழிப்பதற்கு உற்ற நெறியாகும்; உயர்ந்த

முறையுமாகும்,' என்று மக்களுக்கு அறிவூட்டினர் காந்தியடிகள்.

'உலகத்து மக்கள் எல்லாரும் இறைவனின் மக்கள்; நன்மை எது, தீமை எது என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடியவர். தீமையைச் செய்தல் கூடாது என்று உணர்த்தும் மனச் சான்று ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. எனவே, பிற நாட்டினரை அடக்கி ஆளுதல் தீமையானது என்பதை ஆங்கிலேயர் உணர்ந்தே தீருவர். இதை விரைவில் அவர் உணரச் செய்வதற்கு ஏற்ற வழி அவர் நடத்தும் ஆட்சியுடன் ஒத்துழையாமையே ஆகும். அந்த ஒத்துழையாமை, அன்பின் அடிப்படையில் அமைதல் வேண்டும். நம்மை ஆளும் அயலார்மீதும் நாம் அன்பு காட்டவேண்டும்; அவரை வெறுத்தல் கூடாது. இவ்வாறுதான் ஆங்கிலேயரின் மனத்தினை நாம் மாற்ற வேண்டும்,' என்று காந்தியடிகள் கற்பித்தார்.

இன்னும் ஓர் அரிய உண்மையை மக்களுக்குக் காந்தியடிகள் எடுத்துணர்த்தினர்.

நம் நாடு விடுதலை பெற வேண்டும் என்பது உயர்ந்த குறிக்கோள். அந்த நல்ல குறிக்கோளை எய்துவதற்கு எந்த வழியைக் கையாண்டால் தான் என்ன?—இவ்வாறு பலர் அன்று கருதினர். காந்தியடிகள் இக் கருத்தை ஏற்கவில்லை.

'நல்லதொரு குறிக்கோளை எய்தவேண்டுமெனில் நாம் கையாளும் முறையும் நல்லதாகவே

இருத்தல்வேண்டும். குறிக்கோளை அடை வதற்கு நாம் கையாளும் வழியை நெறிமுறை என்கிறோம். குறிக்கோளைப் போன்றே நெறி முறையும் குற்றமின்றி இருக்கவேண்டும். புளிக் கும் பொருளை வைத்து இனிக்கும் பண்டத்தைச் செய்தல் இயலாது. தீயநெறியில் சென்று நல்ல குறிக்கோளை நாம் அடையமுடியாது. ஆதலால், நாடு விடுதலை பெறுவது நல்ல குறிக்கோள் என்றாலும், அதை அடைவதற்கு நாம் மேற் கொள்ளும் நெறிமுறையும் நல்லதாகவே இருக்க வேண்டும். எனவே, வன்முறையின்றி இன் முறையின் அடிப்படையில், அன்புநெறியின் அடிப்படையில், நாம் போராடி நாட்டின் விடு தலையைப் பெற முயலுவதே அறநெறியாகும்.'

இத்தகைய உயர்ந்த கொள்கையை அண் ணல் காந்தி மக்களுக்கு எடுத்துரைத்து, அதையே தாமும் கைக்கொண்டார்.

இவ்வாறு அறநெறியின் அடிப்படையில் நடந்த இந்திய விடுதலைப் போராட்டம் உலக வரலாற்றிலேயே ஒப்பற்றதாகும்.

அன்பு நெறியே வாழ்விற்கு உகந்தது என்று பாடி வந்த நம் கவிஞர் பாரதியார் காந்தியடிகள் அறிவுறுத்திக் கடைப்பிடித்த ஒத்துழையாமை நெறியினைப் பாராட்டினர்.

' தனக்கு அழிவெண்ணும் பிறர் உயிரையும் தன்னுயிர் போல் மதிக்கவும், மன்னுயிரெல்லாம் கடவுளின் படைப்பே என்றுணரவும், போரும் கொலையும் மலிந்த அரசியலில் இந்த மெய்ஞ்

ஞானத்தைப் புகுத்தவும் துணிந்த பெருமானே! கொலை வழியான போர் வழியை இகழ்ந்து, அதைவிட ஆற்றலும் திறனும் உடையது அற வழிதான் என்பதை அறிந்து, ஒத்துழையாமை நெறியினை வகுத்த தலைவரே!' என்று காந்தி யடிகளைப் பாராட்டுகின்றார் பாரதியார்.

'தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

'பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்!
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் "ஒத்துழை யாமை"
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே!'

நம்மை அடிப்போரை எதிர்த்து அடிப்பது எளிது. இது எவரும் செய்யும் செயல். ஆனால், தம்மைப் பிறர் அடிப்பதைப் பொறுத்துக் கொண்டு, எதிர்த்து அடிக்காமல் இருப்பது எளி தன்று. ஆங்கிலேய ஆட்சியாளரின் காவற் படையினர் தடிகொண்டு அடித்தபொழுதும், துப்பாக்கிகொண்டு சுட்டபொழுதும் அதை நிமிர்ந்த நெஞ்சோடும், நேரான பார்வையோ

டும் தாங்கிக்கொண்டு, எதிர்த்து ஏதும் செய்யாமல், 'விடுதலை ஒலியை எழுப்பிக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் இறங்கினர் ; அச்சத்தைத் தவிர்த்தனர் ; ஆண்மை பெற்றனர்.

இந்த மாபெரும் மக்கள் எழுச்சியைக் கண்டு பாரதியார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை வாழ்விக்க வந்த காந்தியடிகளை' 'வாழ்க! வாழ்க!' என்று அவர் வாழ்த்தினர்.

'வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!'

காந்தியடிகள் காட்டிய, பாரதியார் போற்றிய நெறியே இன்றைய அரசியலுக்கும் ஏற்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. கி.பி. 1947 ஆகஸ்டு மாதத்தில் நம் இந்தியநாடு விடுதலை பெற்றது. தன்னுரிமை பெற்ற நம் நாட்டில் மக்களாட்சியே இன்று நடைபெறுகிறது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை நடக்கும் தேர்தல்கள் வாயிலாக நம் ஆட்சியாளரை நாமே தேர்ந்தெடுக்கின்றோம். எந்த ஆட்சியாளர் நன்ருக நாட்டை ஆண்டு மக்களுக்கு நன்மை செய்ய

வில்லையோ அவர்களை அகற்றிவிட்டு அடுத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் மாபெரும் உரிமை மக்களுக்கு உண்டு. இந்த உரிமையை நாம் இன்முறையிற் பயன்படுத்தாமல், வன்முறையில் இறங்குவது கூடாது.

எனவே, நமக்குப் பொது வாழ்வில் ஏற்படும் குறைபாடுகளால் மனம் முரிந்து போய் வன் செயல் எதிலும் நாம் ஈடுபடலாகாது. மக்களாட்சி முறை என்பது மாண்புமிக்கது; நாகரிகம் மிகுந்தது. நாட்டு மக்கள் அனைவரும் ஒரு குடும்பம்போல் இசைந்து நடத்தும் நல்லாட்சி முறையே மக்களாட்சியாகும். குடும்பத்தினருள் கருத்து வேறுபாடு இருக்கலாம். அனைவர் கருத்தையும் கேட்டு அவர்களை அணைத்துச் செல்லுகிறார் குடும்பத் தலைவர். இதுபோல் இணைந்து நிற்பதே குடியாட்சியாகும். ஒவ்வொரு சாராரும் தம் கருத்தினை வெளியிடவேண்டும். ஆனால், அக் கருத்தினை வெளியிடுவதற்கெனச் சொற்களை வீசலாம்; கற்களை வீசக் கூடாது; கொடிகளைக் காட்டலாம்; தடிகளைக் காட்டக் கூடாது; ஆர்வம் இருக்கலாம்; ஆத்திரம் கூடாது; வேகம் இருக்கலாம்; வெறுப்புக் கூடாது. இதுவே காந்தி காட்டிய அரசியல் நெறி; பாரதி படைத்த அமைதி நெறி.

அரசியலில் அறம் கண்ட காந்தி நெறியில் நாம் நின்றால்தான் நாட்டிலே அமைதி நிலவும்; ஒழுங்கு நிலவும். அமைதியும் ஒழுங்கும் அமைந்த நாடே வளரும்; வளம் பெறும்.

## 14. சமயப் பொதுநோக்கு

சாதிக் கொடுமையால் நம் நாட்டிற்கு விளை யும் கேடுகள்பற்றி முன்னர்க் கண்டோம். சாதி வெறியைப் போன்றே சமய வெறியும் நாட்டிற்குக் கேடு பயப்பதாகும். சமய வேறுபாட்டால் தோன்றிய பகையின் காரணமாக உலகில் எத்தனையோ போர்கள் நடந்திருக்கின்றன.

சமயம் அல்லது மதம் என்பது என்ன? உலகு அனைத்தையும் அண்டங்கள் அத்தனையையும் நடத்தும் ஆற்றல் ஒன்றுள்ளது. எங்கும் நிறைந்துள்ள, இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் அமைந்துள்ள அந்த ஆற்றல் இறைமை என்று கூறப்படும். இத்தகைய இறைமையை வெவ்வேறு பெயர்களால் ஒவ்வொரு சமயத்தினரும் குறிப்பிடுகின்றனர். பெயர்கள் வெவ்வேறு ஆயினும் அப் பெயர்களால் குறிப்பிடப்படும் இறைமை ஒன்றேயாகும். அஃது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. இதுவே உலக சமயங்கள் உணர்த்தும் உண்மையுமாகும்.

ஆனால், இந்த அடிப்படை உண்மையை உணராமல், வெவ்வேறு சமயத்தினரும் தங்களுக்குள் மாறுபட்டுப் பகையுணர்வை வளர்த்துக் கொள்ளுகின்றனர்.

இந் நிலையைக் கண்ட பாரதியார் மக்களிடையே சமய ஒற்றுமையைப் பரப்பவேண்டும் என்னும் ஆர்வங்கொண்டார். பொதுவாக, சமயத்தின் சாரத்தினையும், வேறுபட்ட சமயங்களின் ஒற்றுமையையும் உணர்த்தும் அவர்தம் பாடல்கள் ஞானக் களஞ்சியங்களாக விளங்குகின்றன.

இதுதான் இறைமை அல்லது கடவுள் என்று எதைக் காட்டிச் சொல்ல முடியும்? உலகனைத்துமே இறைமையின் வடிவந்தான். இறைமை இல்லாத இடம் இல்லை. அணுவும், அணுவுக்கு அணுவும், அவ்வணுக்களின் தன்மையும் எல்லாமே இறைமைதான். பொருள்கள் அனைத்தின் தன்மைகளும் இறைமைக்கு உண்டு. எனினும், இதுதான் இறைமையின் தன்மை என்று ஒன்றைக் குறிப்பிட்டுக் கூற இயலாது. எல்லாப் பொருள்களாகவும் இறைமை நிற்கின்றது; ஆயினும் அது ஒரே பொருள்தான். இவ்வுண்மையை எளிய பாடல்களால் உணர்த்துகிறார் கவிஞர் :

'தூல வணுக்களாய்ச்
சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த்
தன்மையெலாந் தானாகி,

'தன்மையொன் றிலாததுவாய்த்
தானே ஒருபொருளாய்த்
தன்மைபல வுடைத்தாய்த்
தான்பலவாய் நிற்பதுவே.'

எல்லாச் சமயங்களும் இறைமையை எவ்வாறு கூறுகின்றனவோ அவ்வாறே அதை விளக்கிப் பாடுகின்ருர் பாரதி. இறைவன் எங்கும் உள்ள வன் (Omnipresent), எல்லாம் வல்லவன் (Omni-potent), யாதும் அறிந்தவன் (Omniscient) என்று சமயத்தினர் அனைவரும் கூறுகின்றனர்.

'எங்குமுளான் யாவும் வலான்
யாவுமறி வானெனவே
தங்குபல மதத்தோர்
சாற்றுவதும் இங்கிதையே.'

எவ்வளவு எளிமையான பாடலிலே எவ்வளவு அருமையான கருத்தைக் கூறுகிருர் கவிஞர்!

உலகு அனைத்தையும் அண்டங்கள் அத்தனை யையும் ஆட்டி நடத்தும் ஆற்றலைத் தூய்மை யான அறிவாக, வாலறிவாகக் காணுகின்ருர் கவிஞர். அந்த அறிவே தெய்வமாகும். இத் தகைய அறிவொன்றே தெய்வம் என்ருல், ஆயி ரம் தெய்வங்கள் உண்டென்று கூறுதல் அறி வின்மையன்ருே? அந்த அறியாமையைக் கடி கின்ருர் பாரதியார்:

'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! — பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?

'மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்! — எத
னூடும்நின் ருேங்கும் அறிவொன்றே தெய்வமென்
ருேதி யறியீரோ?'

பல தெய்வங்கள் உண்டென்று கூறி, அதற்கான கட்டுக்கதைகள் பலவற்றை எழுதி, போலியான கள்ள மதங்களைப் பரப்புவோர்களைப் பார்த்து, 'அவ்வாறு செய்வதற்கு ஆதாரம் என்ன இருக்கிறது?' என்று அவர் அடித்துக் கேட்கின்றார் :

'மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப் — பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ?'

எங்கும் நிறைந்துள்ள இறைமையை நம் இதயத்திலே இசைத்து வழிபடுவதற்குக் காவித் துணியும் கற்றைச்சடையும் பூண்ட வேடம் வேண்டா என்கிறார் கவிஞர் :

'காவித் துணிவேண்டா,
கற்றைச் சடைவேண்டா ;
பாவித்தல் போதும்
பரமநிலை யெய்துதற்கே.'

மனிதன் இயற்கையைக் கண்டுதான் இறைமையை உணர்ந்தான். உலகத்து இயற்கைப் பொருள்களாக உள்ளவை ஐந்து முதற்பொருள்கள். நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து முதற்பொருள்களே எங்கும் நிறைந்துள்ளன. எல்லாப் பொருள்களும் இப்பொருள்களின் சேர்க்கையாலேயே ஆனவை. எனவே, இயற்கையை இறைமையாகப் போற்றிய நம் முன்னோர், இவ்வைம் பூதங்களையும் இறைமையாகவே கண்டனர்.

'போற்றியிப் புவனம் நீர்தீக்
காலொடு வான மாளுய்'

என்று மாணிக்கவாசகர் இறைவனைப் பாடு கின்ருர்.

'அலைக்கின்ற நீர்நிலங் காற்று
அனல்அம் பரமாகி நின்றீர்'

எனத் திருநாவுக்கரசர் பாடுகின்ருர்.

இம் மெய்யடியார்களின் பரம்பரையில் வந்த பாரதியாரும்,

'ஆகாசந் தீகால் நீர்மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்'

என்று இறைமையை ஏத்துகின்ருர்.

'பூதங்கள் ஐந்தில் இருந்தெங்கும் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்றுகின்ரேம்;
... ... ... ... ... ... ... ... ... ... ...
வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவுகின்ரேம்'

என்று ஐம்பூதங்களை இயக்கும் ஆற்றலை,

'யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே!'

என்று கூறி இயற்கையையே தெய்வமாகக் காண்கின்ருர் கவிஞர்.

பொதுவாக, மக்கள் தமக்குப் பதவியோ செல்வமோ வேண்டுமென்று கூறியே இறைவனை வழிபடுகின்றனர். ஆனுல், பாரதியாரோ தமக்கென எதையும் வேண்டுவதில்லை. பிறரெல்லாம் கேட்காத வரத்தை அவர் தெய்வத்திடம் கேட்கின்ருர். அவர் கேட்கும் வரம் என்ன என்று நாம் பார்ப்போம் :

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா!'

கவிஞரின் அன்புணர்வு மக்கள்மீது மட்டு மன்றிப் பறவைகள், விலங்கினங்கள்மீதும், ஏன் புற்பூண்டுகள்மீதும் செல்லுகின்றன.

'அப்பா நான் வேண்டுதல்கேட்
டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்புசெயல் வேண்டும்'

என்னும் இராமலிங்க அடிகளாரின் பாடலையே பாரதியாரின் இப் பாடல் நினைவூட்டுகிறது. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்னும் வள்ளலாரின் இதய ஒலியினையே 'புற்பூண்டு, மரங்களின் இடும்பை தீர வேண்டும்' என்னும் பாரதியாரின் வேண்டுதல் ஒலிக்கின்றது.

மக்களுக்கு உற்ற கடமைகள் நான்கு என்கிறார் பாரதியார் :

'கடமை யாவன : தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி,
அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்

தேவருந் தானுய், திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்—
இந்நான் கேயிப் பூமி யிலெவர்க்கும்
கடமை யெனப்படும் ... ... ... ... ...'

தன்னைக் கட்டுப்படுத்தி வாழ்தல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலன் வேண்டுதல், இறைவனைப் போற்றுதல் – இந் நான்கும் ஒருவருக்கு இன்றியமையாக் கடமைகள் என்கிருர் கவிஞர். நாராயணன் என்று நாமமைக்கும் தெய்வந் தான் அல்லாவாக அமைந்துள்ளது, எஹோவா என்னும் பெயர் பெற்றுள்ளது என்று எவ்வளவு அழுத்தமாகக் கூறுகின்ருர் கவிஞர்.

இசுலாமியர் தொழும் 'அல்லா'வைப்பற்றியும் பாரதியார் பாடியுள்ளார் :

'அல்லா, அல்லா, அல்லா !'

பல்லாயிரம் பல்லாயிரம்
கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ
ரெல்லை யில்லாவெளி வானிலே !'
நில்லாது சுழன்றேட
நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலுந்
தொடரொணுத பெருஞ்சோதி !'

உண்மை என்னும் சிலுவையிலே நம் உணர்வினைத் தவம் என்னும் ஆணியால் அடித்து நிறுத்திஞல், அஃதாவது தவத்தால் நம் உணர்வினை ஒடுக்கி உண்மையை உணர நாம் முற்பட்டால், இயேசுநாதர் தோன்றுவார் என்று பாரதியார் கூறுகின்ருர் :

'உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண் டடித்தால்,
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்.'

இறைமை என்னும் மெய்ப்பொருள் ஒன்றே ஆகும். உயிர்களெல்லாம் அதன் வடிவங்களே. அப்படியிருக்க 'என் தெய்வம் வேறு,' 'உன் தெய்வம் வேறு' என்று கூறி உலகோர் ஒருவருக்கொருவர் பகையுணர்வு கொள்ளுதல் எவ்வளவு இழிவானது?

'ஒன்றேமெய்ப் பொருளாகும்; உயிர்களெலாம்
அதன் வடிவாம்; ஒருங்காலை,
என்தேவன் உன்தேவன் என்றுலகர்
பகைப்ப தெலாம் இழிவாம் ... ...'

உலகில் ஊர்வனவும் பறப்பனவுமான உயிர்களனைத்தும், ஞாயிறும், மதியும், விண்மீன்களும், மேகமும், எல்லாப் பொருள்களும் தெய்வத்தின் தோற்றங்கள். இதை எழுதுகின்ற எழுதுகோலும் எழுதப்படும் எழுத்துங்கூடத் தெய்வந்தான். இவ்வாறு இறைமையின்றி வேறு பொருள் ஏதுமில்லை என்னும் அரிய உண்மையை எளிதாகக் கூறுகிறார் பாரதியார் :

'உயிர்களெலாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டு மன்றி யிங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்;
வெயிலளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்
மேலுமிங்குப் பலபலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்!'

இறைமை அன்றி எப்பொருளும் இல்லை என்னும் அறிவு ஒன்றே பரமஞானமாகும் என்கிறார் பாரதியார்:

'... ... ... ... ... ... ... ... ... ...அவை
யன்றியோர் பொருளுமில்லை அன்றியொன்று மில்லை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் — இந்த
அறிவுதான் பரமஞான மாகும்.'

இவ்வாறு பரமஞானத்தைப் புகட்டும் பாடல்களை இனிய எளிய தமிழில் ஞானக்கவி பாரதியார் பாடியுள்ளார்.

பொதுவாக, சமயங்கள் சாத்திரங்கள் இவையெல்லாம் நாம் இவ்வுலகிலிருந்து மறைந்த பின் 'சுவர்க்கம்' செல்லுவதற்கு வழி வகுக்கின்றன என்று கருதப்படுகிறது. சிவலோகப் பதவி அடையலாம், வைகுந்தத்தில் இனிது வாழலாம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. இவ்வுலக வாழ்வுக்கான ஒற்றுமைக்கு அவை வழி காட்டுவதில்லை. இந்த ஒற்றுமையை உணர்த்தாத சமய சாத்திரங்களைப் 'பேயுரைகள்' என்று கடிகின்றார் கவிஞர். அச் சாத்திரங்களை நம்பிக்கொண்டு, செத்த பிறகு, சிவலோகப் பதவி கிடைக்கும், வைகுந்த வாழ்வு கிட்டும் என்று எண்ணுவோர்களைப் 'பித்தர்கள்' என்கின்றார் பாரதி:

'செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்!'

எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் உறைவது இறைமை என்னும் உண்

மையை உணர்த்தி, இந்த இறைமை உறவால் எல்லா உயிர்களிடையும் அன்புணர்வு பெருக வேண்டும் என்று அவர் கூறுகிருர். நம் உறவினர்கள்மீது நாம் எதனுல் அன்பு காட்டுகிரும்? அவர்களுக்கும் நமக்கும் உள்ள உறவுத் தொடர்பால். உலகத்து மக்கள் அனைவரும், ஏன், உலகத்து உயிர்கள் எல்லாமே, இறைமை என்னும் பிணைப்பால் உறவுகொண்டுள்ளன. இந்த இறைமை உறவால் நாம் எல்லா உயிர்கள்மீதும் அன்பு கொள்ளவேண்டும். இத்தகைய அன்பினுல் நாம் அனைவரும் இன்பம் பெறுகின்ரும் என்பது அவர் கண்ட உண்மை. அன்புணர்வைவிடச் சிறந்த தவம் இல்லை; அன்புடையார் இன்பம் பெறுவது இயல்பு என்கிறது பாரதி கூறும் ஞானம்:

'அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.'

உலகத்து உயிர்கள், பொருள்கள் ஆகியவற்றிடையுள்ள இறைமை உறவினை உணர்ந்து, அதனுல் அன்புணர்வினை நாம் பெற்றுவிடில், மக்களுக்குள் ஏற்றத்தாழ்வேது? சாதிப் பிரிவு ஏது? சமயப் பிணக்கு ஏது? அன்புணர்வு பெருகிவிடில், உலகத்து "மக்கள் எல்லாரும் ஒன்று, அதுவே நன்று - என்று பாரதியாரின் ஞானமுரசு முழங்குகிறது:

'ஒன்றென்று கொட்டு முரசே! — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்!'

## 15. வாழிய பாரத மணித்திரு நாடு

ஞானக்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பிறந்தது கி.பி. 1882 ஆம் ஆண்டில். மறைந்தது கி.பி. 1921 ஆம் ஆண்டில். இந்த நாற்பதாண்டுக் காலமும் இந்திய வரலாற்றிலே கிளர்ச்சியுற்றதோர் காலமாகும்.

தொன்மையான பண்பாடும் நாகரிகமும் உள்ள இந்திய நாடு அக் காலத்தில் அயலாருக்கு அடிமைப்பட்டிருந்தது. பண்டைச் சிறப்பினை மறந்த பாரத நாடு தன் ஒளியிழந்து கிடந்தது. ஆனால், அறிஞர்களுள் சிலர் ஆங்கில மொழியறிவும் மேனாடுகளின் அறிவியல் ஞானமும் பெற்று, பாரத நாட்டின் அடிமை நிலையை அகற்றவேண்டும் என முனைந்துநின்றனர். அதற்கென எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும், இன்னல்களை ஏற்பதற்கும் அவர்கள் அஞ்சவில்லை. விடுதலை வேட்கையுணர்வு கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது அவர்கள் உள்ளத்தில். பாரத நாடு விடுதலை பெற்றுப் பண்டைச் சிறப்பினை அது எய்த வேண்டுமென அவர்கள் துடித்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு துடித்துக்கொண்டிருந்த தூய்மையாளர்களுள் ஒருவர் பாரதியார்.

'என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
'என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?'

என ஏங்கிய நிலையிலே எழுச்சி பெற்றது பாரதியாரின் கவிதையுள்ளம்.

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்'...

என்பது அவர் வாக்கு. உள்ளத்தில் ஒளி பெற்ற பாரதியாரின் பாடல்கள் அறிவொளி உமிழும் அழியாப் படைப்புகளாய் அமைந்தன. உண்மைக் கவிஞனின் உரைகள் ஒரு நாட்டிற் கென்றோ ஒரு காலத்திற்கென்றோ பொருந்து வனவல்ல; அவை எங்கும் எக்காலத்திற்கும் பொருந்துவன. உண்மைக் கவிஞர் பாரதியின் பாடல்கள் எக்காலத்துக்கும் பொருந்தும் ஏற் பெற்றவை.

அவர் பாரத நாட்டின் பண்பைப் பாடின செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பாடினர்; த மொழியாம் தமிழின் தண்மையைப் பாடி அதன் ஒண்மையைப் பாடினர். அவர் பா நாட்டு விடுதலைப் பாடல்கள், நல்லிதயத்தி விடுதலை வேட்கையையே ஒலிக்கின்றன. சம பொது நோக்கை விளக்கும் அவர்தம் பாடல் உண்மை ஒளி வீசும் உயர்ந்த சுடர்மணிக

சாதிப் பிரிவுகளால் தோன்றும் சழக்குக யும், 'நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின் மக்கள் வாழ்வதையும், கூட்டத்திற் கூடி நி கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற்கொள்ள நம் நாட்டினரின் நிலைமையையும் இடித்துக்கூ எத்தனையோ பாடல்களை அவர் பாடியுள்ள இன்னும் அக் குறைபாடுகள் நம் சமுதாயத் இருக்கத்தான் செய்கின்றன. ஏன், ஓர அவை பெருகியுள்ளன என்றுகூடக் கூறலாம்.

ஒளி படைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும், களி படைத்த மொழியும், கடமை கொண்ட தோளும், ஏறுபோன்ற நடையும், வீறு தவழும் முகமும் பெற்ற இளைஞர்களை 'வாருங்கள்! வாருங்கள்' என்று அழைக்கின்ருர் பாரதியார். 'ஒளியிழந்த நாட்டிலே உதய ஞாயிறெப்பவே வாருங்கள்! களையிழந்த நாட்டிலே முன்போல் களை சிறக்க வாருங்கள்!' இவ்வாறு இளைய பாரதத்தினரை ஆர்வத்துடன் கூவியழைக்கின்ருர் கவிஞர். என்றுமுள்ள இளைய பாரதத்தினருக்கு அவர் விடுக்கும் அழைப்பு என்றும் ஒலித்துக்கொண்டே இருப்பதாகும். அவர் தம் பாடல்களில் படைத்துக் காட்டும் வாழ்க்கை நெறி நின்று இளைய பாரதத்தினர் இயங்கிஞல் சமுதாயத் தீமைகள் சட்டென விலகும். பாரதியின் கனவு நனவாகும்.

பாரதியாரைத் தேசியக் கவி என்று அனைவரும் போற்றுவர். அவர் தேசியக் கவிஞர் மட்டும் அல்லர். அவர் வீட்டுக் கவி, நாட்டுக் கவி, நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஞானக் கவி.

அவர்தம் பாடல்களில் இழைந்து ஒளிரும் வாழ்க்கை நெறிகள் தாய்மொழிப் பற்று, தாய் நாட்டுப் பற்று, அன்பு நெறி என்பன. தாய் மொழி பேணி; தாய்நாட்டுப் பற்றுடன், அன்பு நெறியிலே நாம் அனைவரும் வாழ்ந்தால்தான் நாடு உயரும், நாமும் உயர்வோம்.

'வாழிய செந்தமிழ்;! வாழ்கநற் றமிழர்;!
வாழிய பாரத மணித்திரு நாடு.'

# கட்டுரைப் பயிற்சி

பின்வரும் பொருள்கள் பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை எழுதிப் பயில்க:

1. பாரதி வாழ்ந்த காலச்சூழல்
2. பாரத நாட்டின் பழம்பெருஞ் சிறப்புகள்
3. நம் நாட்டுப் பண்பாடு
4. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும்
5. தமிழின் பழமையும் புதுமையும்
6. தமிழ் வளர்ச்சி ஆக்கப் பணிகள்
7. பாரத நாட்டின் ஒருமைப்பாடு
8. சாதிப் பகுப்பும் சமுதாயமும்
9. புதுமைப் பெண்
10. கைத்தொழில் முன்னேற்றம்
11. கல்வி முறையில் தாய்மொழியும் பிறமொழியும்
12. பாரதியின் விடுதலை வேட்கை
13. அச்சத்தைப் போக்கும் அன்பு நெறி
14. பாரதியின் இயற்கை ஈடுபாடு
15. வாழ்க்கைக் குறிக்கோள்கள்
16. காந்தியடிகளும் பாரதியும்
17. பாரதியின் சமயப் பொதுநோக்கு
18. பாரதியின் கவிதைச் சிறப்பு
19. பாரதியின் கனவுகள்
20. பாரதி தேசிய கவி